# விடுதலைப்புலிகள்

குரல்: 79 மார்கழி - 1997 அன்பளிப்பு: 5/-



உள்ளே

★ 50 வருட வரலாற்றுப்பாடம்
★ களுத்துறை சிறைப்படுகொலை
★ சூடாநாட்டில் காணாமல்போனோர்
★ விபரீத அவலம் நிரம்பிய விசித்திரக்கதை
★ ஜயசிக்குறுயின் கடிவாளம் இராணுவத்தின் கைகளிலா
★ உலைக்களம்
★ இந்தியத் தேர்தல்


### எட்டாவது மாதமாக

## ஜயசிக்குறுய் தொடர்கின்றது.

# பேரினவாதத்தின் ஆசை ஈடேறுமா!

**"கானகத்து ஆவிகள்" என்றதலைப்பில் வன்னிச்சமரை - அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'நியூஸ்வீக்' சஞ்சிகை (8. 12. 97) மதிப்பீடு செய்துள்ளது. வியட்நாமின் காடுகளுக்குள் புகுந்து-வியட்கொங் போராளிகளிடம் சிக்கி-அமெரிக்க இராணுவம் சிரமழிந்ததுபோல, வன்னிக்காடுகளுக்குள் நுழைந்து - புலிகளிடம்சிக்கி - சிங்களப் படைகள் அவதிப்படுகின்றன என்று அது விபரித்துள்ளது.**

நியூஸ்வீக் சஞ்சிகையின் வன்னிக்கள விவரணம் யதார்த்தமானதே. ஜயசிக்குறுய் நடவடிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் விருப்பமும் - வன்னிக்கள யதார்த்தமும் முட்டிமோதுகின்றன. இதனால். ஜயசிக்குறுய் தலைமையும் - சிங்கள இராணுவத்தலைமையும் கருத்துமோதலில் ஈடுபடுகின்றன. இதனாலேயே, ஜயசிக்குறுய் தலைமைகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. இதுகாரணமாகவும் - பெரும் இழப்புகள் காரணமாகவும் படையினரின் மத்திய மற்றும் கீழ்நிலை அதிகாரிகள்-சிப்பாய்கள் குழப்பத்தில் மூழ்கியுள்ளனர்.

கடந்த 8 மாத காலமாக நடைபெறும் தீவிர சமரில் சிங்களத்தின் சிறப்புக் கொமாண்டோ அணிகள் பலத்த அடிவாங்கி-சிதைந்துபோய் உள்ளன. அதேவேளை, படையினரின் நகர்வு முயற்சிகளை புலிகள் கடுமையாகத் தாக்குவதால், முன்முனையில் சமராடும் சிங்களத்தின் சிறந்த அணிகளும் கடுமையான சேதங்களைச்சந்தித்துள்ளன. இவை காரணமாக, சிங்கள இராணுவத்தின் முன்னணிப்படை அழிநதபடி உள்ளது.

இதேசமயம், ஜயசிக்குறுய் படையினர் மீதான தாக்குதல்களின் போது பெருமளவு வாகனங்கள் - களஞ்சியங்கள் அழிந்து படுகின்றன. அத்துடன், புலிகளின் ஆட்டிலறி - எறிகணை வீச்சுக்களாலும் நாள்தோறும், படைவாகனங்கள் சேதமாகின்றன. இதனால், ஜயசிக்குறுயின் பின்புலவேலைகள் பெரும் சிரமத்தைச் சந்தித்துள்ளன. இந்த சிரமத்தை பருவமழையின் தீவிரம் மேலும் கடுமையாக்கியுள்ளது. ஜயசிக்குறுய் படைகள் களத்தை விரிவாக்கம் செய்யச் செய்ய, அதன் விளியோகத் தொப்புள்கொடி பலவீனமடைந்துவருகின்றது.

இதேவேளை, சிங்களப்படையின் ஆயுதங்களும் - சக்திமிக்க இராணுவ உபகரணங்களும், புலிகளின் திடீர் தாக்குதல்களால், கைமாறி புலிகளிடம் போய்ச்சேருகின்றன. இதனால், படையினர் மீதான தாக்குதலின்போது புலிகள் அதிகளவு படைக்கல சக்தியை, குறிதவறாது பயன்படுத்தி சிங்களச் சிப்பாய்களைக் கிலிகொள்ளச் செய்கின்றனர். இவ்விதம் படையினரின் சண்டைவலு, ஜயசிக்குறுயில் கடுமையாகச் சேதப்பட்டுள்ளது.



மண்ணிலொரு பிடியெனினும்
அள்ளவரும் கைதறிக்கக் காத்திருக்கும் தமிழர்சேனை.

அத்துடன், ஆட்பற்றாக்குறை என்ற நெருக்கடியையும் சிங்களப் படை எதிர்கொள்கின்றது. இந்த எட்டுமாதச் சமரில் மட்டும் 3000 படையினர் பலியாகிவிட்டனர். 7000இற்கு மேற்பட்டோர் காயமடைந்து விட்டனர். அதாவது பத்தாயிரம் பேரை ஜயசிக்குறுய் சமரால், சிங்களப்படை இழந்துள்ளது. இந்த இழப்பை ஈடுசெய்ய படைத்தலைமை பெரும் சிரமப்படுகின்றது. ஜயசிக்குறுயை வெற்றிகரமாக முடித்துவிட்டு - அந்த வெற்றித் திளைப்பில் சிங்கள மக்கள் மூழ்கியிருக்கும்போது - புதிதாக படைக்கு ஆட்சேர்க்கலாம் என்றிருந்த அரசின் திட்டமும் தவிடு பொடியாகியுள்ளது.

எனினும், நடவடிக்கையை நிறுத்தும் எண்ணம் இராணுவத்தலைமைக்கு இல்லை. ஜயசிக்குறுய் விரைவில் முடிவுறும் என்று அடிக்கடி காலக்கெடுக்களை விதித்து படையினரையும் உற்சாகப்படுத்தி- சிங்கள மக்களையும் திருப்திப்படுத்த ரத்வத்த முயல்கின்றார். இப்போது, பெப். 4 இற்கு முன்னர் பாதை அமைப்பு பூர்த்தியாகும் என்று, அவர் புதிய காலக்கெடுவை விதித்துள்ளார்.

கடந்த 225 நாட்களாக முக்கி - முனகியும் முடிவுபெறாத இராணுவ நடவடிக்கையை - வருகின்ற ஒரு மாதத்திற்குள் முடித்துவிடுவதாக அவர் கூறுவதை நம்ப எவரும் தயாராக இல்லை.

முட்டாள்த்தனமாக படையினரை முன்தள்ளி பாதையை அமைத்தாலும்கூட, அதை எப்படி பாதுகாத்து வைத்திருப்பது? என்ற நியாயமான கேள்வியை சில சிங்கள இராணுவ ஆய்வாளர்கள் எழுப்பியுள்ளனர். பாதையின் இருமருங்கும் பத்து கிலோ மீற்றர்கள் தூரத்தைக் கைப்பற்றி - வைத்திருந்து பாதையை பாதுகாக்க முடியும்! என்று, ரத்வத்த, கேள்விக்கு பதிலளித்துள்ளார். ஆட்பற்றாக்குறையால் அவதிப்படும் ஒரு படைத்தலைவரின் பொறுப்புணர்ச்சியற்ற பதிலாகவே அது உள்ளது.

சிங்களப்படையைப் பொறுத்த வகையில், ஜயசிக்குறுய், ஒரு நீண்ட இராணுவப்பயணம். இந்தப்பயணத்தில் அது பேரிழப்புக்களையும் - பெரும் நெருக்கடிகளையுமே இது வரை சந்தித்துள்ளது. அரைப்பங்கைக் கூட எட்டாத நிலையில், ஜயசிக்குறுய் படை சந்தித்த இந்த இழப்பு, எதிர்காலத்தில் அது சந்திக்க இருக்கும் அனர்த்தத்தை எடுத்துக் கூறப் போதுமானது. O


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# 50 வருட வரலாற்றுப் பாடம்

சுதந்திரம் என்ற பெயரில் இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரத்தைப்பெற்ற 50 வருட பூர்த்தியைக் கொண்டா்ட, சிறிலங்கா அரசு தயாராகி வருகின்றது.

வழமையாக, தனது வர்த்தகத் தலைநகரான கொழும்பில் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை நடாத்திவந்த சிங்கள அரசு, இம் முறை, அதன் சுதந்திரதினப் பொன்விழாவை –பேரினவாதத்தின் பண்பாட்டுத் தலைநகரான கண்டியில் கொண்டாட ஏற்பாடுகள் செய்கின்றது.

கடந்த 50 வருடகாலமாக இலங்கைத்தீவை ஆட்சி செய்த சிங்கள அரசாங்கங்கள், தமிழ்மக்களை இனஅழிப்புச்செய்வதிலேயே காலத்தையும் – செல்வத்தையும் செலவிட்டுவந்துள்ளன.

பிரித்தானியரிடமிருந்து ஆட்சியதிகாரத்தைப்பெற்ற ஒரு சில மாதங்களில் மலையகம் வாழ் தமிழர்களின் குடியுரிமைகளைப் பறித்து- தமிழினத்தின் அரசியல்பலத்தைச் சிதைத்தது.

பின்னர், சிங்களத்தை அரசகரும மொழியாக்கி - தமிழை நிராகரித்தது. சிங்களமொழியில் தேர்ச்சிபெறாதோரை அரசபணிகளிலிருந்து நிறுத்தி, தமிழரின் வேலைவாய்ப்புகளைப் பறித்தது. தமிழ்மக்களின் ஜீவனோபாயமொழியாக சிங்களத்தை திணித்து, தமிழர்களை சிங்களமயமாக்க முயன்றது, அத்துடன், தரப்படுத்தல் என்ற நடைமுறை மூலம் தமிழ்மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பிற்குத் தடைபோட்டு, தமிழ் இனத்தின் அறிவுவளர்ச்சியை தடுக்கமுயன்றது. இவற்றின்மூலம், தமிழ் இனத்தின் பொருண்மிய பலத்தை உடைத்து - தமிழ்மக்களை – சிங்கள அரசிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளிவிட விரும்பியது.

இதேவேளை, தமிழினத்தின் பாரம்பரிய நிலத்தைக் கவர்ந்து– அவற்றை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளித்து- சிங்களக்குடியேற்றங்களை நிறுவி, நில அபகரிப்பையும் செய்தது. தமிழரின் தாயகக்கோட்பாட்டைச் சிதைக்கும் வகையில் இந்த நில அபகரிப்பை திட்டமிட்டு நடாத்தியது.

இறுதியில், தமிழ்மக்களை இனப்படுகொலை செய்யவும் ஆரம்பித்தது. இனக்கலவரங்கள் என்ற போர்வையில் அரசபடைகளையும் - சிங்களக் காடையர்களையும் ஏவிவிட்டு தமிழர்களைக் கொன்றுதள்ளியது. 1956, 58, 61, 77, 81, 83 என்று முறைவைத்து தமிழ்மக்களை இனஅழிப்புச் செய்துவருகின்றது. தமிழர்களை அவர்களது வாழிடங்களிலிருந்து விரட்டி - அவர்களது கிராமங்களை எரித்தழித்தது- அவர்களது நிலங்களை கொள்ளையடித்தது. தமிழர்களின் வாணிப நிலைகளை குறிவைத்துத்தாக்கி - அவர்களின் வீடுகள், சொத்துக்களை தீயூட்டி பெரும் பொருண்மிய நாசத்தை உண்டாக்கியது. முடிவாக, ஒரு போரையும் தமிழினத்தின்மீது திணித்தது. அதன்வாயிலாக தமிழினப்படுகொலையை வேகப்படுத்தியது. பல்லாயிரம் தமிழ்மக்களைக் கொன்றுதள்ளி, தமிழர்நிலத்தில் சாவையும் அவலத்தையும் விதைத்து – தமிழர்பூமியை ரணகளமாக்கியுள்ளது.

இந்த 50 ஆண்டுகளில், இலங்கைத்தீவில் ஐம்பதினாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தமிழர்தாயகத்தின் மூன்றில் ஒரு பகுதி நிலம் சிங்களக்குடியேற்றங்களால் அபகரிக்கப்பட்டுள்ளது. தென்தமிழீழத்தின் சனத்தொகை வீதாசாரத்தில் தலைகீழ் மாற்றம் நடந்துள்ளது. தமிழர்தாயகத்தின் தென்பகுதியில், தமிழ்மக்கள் சிறுபான்மையினராக மாற்றப்பட்டுள்ள பயங்கரம் நிகழ்ந்துள்ளது. சிங்கள அரசின் படையெடுப்புக்களாலும் – குண்டுவீச்சுக்களினாலும் தமிழரின் தேசியவளங்கள் நாசமாக்கப்பட்டுவருகின்றன. தமிழரின் நகரங்கள், கிராமங்கள் சிதைக்கப்பட்டுவருகின்றன. தமிழரின் வரலாற்றுப்பூமியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது. அங்கே இராணுவ ஆட்சியை நிறுவி, தமிழின அழிப்பை துரிதப்படுத்தியுள்ளது. கொலைகளும் - காணாமல்போதல்களும் - பாலியல் வல்லுறவுகளும் - சூறையாடல்களும் அங்கே தினசரி நடக்கின்றன.

தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்து- தமிழரின் தேசிய அடையாளங்களை அழித்து, இலங்கைத் தீவில் இருந்து தமிழினத்தை பூண்டோடு அழிக்க சிங்களப்பேரினவாதம் தீவிரமாக முயற்சிக்கின்றது. இராணுவ பலத்தைப் பிரயோகித்தும் – அரசியல் தந்திரோபாயங்களைப் பயன் படுத்தியும் அதைச்சாதிக்க, பேரினவாதம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

இந்த 50 வருடகாலத்தில் தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க, சிங்கள அரசு எந்த ஒரு உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இனப்பிரச்சனைத் தீர்வுக்காக தமிழர் தலைமை தெரிவித்த ஆலோசனைகளுக்கு சிங்களப்பேரினவாதம் செவிசாய்க்கவில்லை. வருடங்கள் செல்லச்செல்ல பேரினவாதமும் வளர்கின்றது. ஆட்சி அதிகாரத்தில் பேரினவாதத் தின்பிடி வர வர இறுகி – தமிழர்களை இன அழிப்புச்செய்யும் தீவிரம் அதிகரித்துக்கொண்டு செல்லும் உண்மையை எமது மக்கள் எதிர் கொண்டபடி உள்ளனர்.

சிங்களமும்- சிங்களப் பேரினவாதமும் சட்டமயமாக்கப்பட்டு– நிறுவனமயப்படுத்தப்பட்டு, ஒரு பூதாகார சக்தியாக எங்கும் வியாபித்து, எதிலும் ஆதிக்கம் செலுத்தி, எல்லாவற்றையும் தன்வயப்படுத்தி வருகின்றது.

தமிழ்மக்களின் ஒப்புதலுடன், தமிழர் நிலத்தில் சிங்களப் பேரினவாதத்தை நிரந்தரமாக நிலைநிறுத்தும் யோசனைகளே சந்திரிகாவின் தீர்வுப்பொதியை நிறைத்துள்ளன. அரசியலில், சட்டரீதியாக எந்தப் பங்கும் வகிக்காத பிக்குகள் முன்னணியிடம் தீர்வுப்பொதியைச் சமர்ப்பித்து- அவர்களிடம் அனுமதிபெறும் பேரினவாதமரபை சந்திரிகா அம்மையாரும் கடைப்பிடித்துள்ளார். பேரினவாதத்தின் குறியீடாகவுள்ள பிக்குகள் சங்கத்திடம் ஆசிபெற்று - இனப்பிரச்சனைக்கான தீர்வுபற்றிக் கருத்துவெளியிடும் நடைமுறை, கடந்த 50 ஆண்டுகளில் ஒரு மரபாக வளர்ந்து வருகின்றதேயன்றித் தேயவில்லை.

இந்தநிலையில், கடந்த 50வருட வரலாற்று அனுபவம், ஒரு விடயத்தை தமிழினத்திற்கு இடித்துக்காட்டுகின்றது. அதாவது, சிங்கள அரசானது, தொடர்ந்தும் தமிழர்களை அழிப்பதிலும்- தமிழர் தேசியத்தை சிதைப்பதிலுமே முனைப்பாக இருக்கப்போகின்றது என்பதே அதுவாகும்.

இராணுவ ஆட்சிக்குட்பட்டுள்ள குடாநாட்டிற்கு வன்னியை ஊடறுத்து - பாதைதிறந்து தமிழர் படையை வெற்றிகொண்ட செய்தியுடன், தனது சுதந்திர தினப்பொன்விழாவை கொண்டாடவே பேரினவாதம் துடிக்கின்றது.

ஈழத்தமிழர்களாகிய நாங்கள்– அவர்கள் தாயகத்தில் வாழ்ந்தாலும் சரி – வெளிநாடுகளில் வசித்தாலும் சரி – ஒரு அரசியல் உறுதிப்பிரமாணத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய கடப்பாட்டுடன் உள்ளோம். அதாவது, தமிழர்தாயகத்தின் தன்னாட்சிக்காக தொடர்ந்து போராடுவது என்பதே அந்த அரசியல் பிரமாணமாகும். ஆகவே, தமிழரின் தன்னாட்சிப்போராட்டத்திற்கு தலைமை தாங்கி - வழிநடத்தும் தலைவர் பிரபாகரனின் கரத்தை வலுப்படுத்தி – புலிகள் இயக்கத்திற்கு எல்லாவகையிலும் எமது மக்கள் பக்கபலமாக நிற்கவேண்டும். உறுதிகொண்ட மக்கள் இனம்தான் இறுதியில் வெற்றி பெறும். இது வெறும் கோசம் அல்ல. இதுதான் வரலாற்றுப்பாடம்.

## நுணுக்குக்காட்டி

“ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளாக தமிழ் மக்கள் இந்த நாட்டில் சிந்திய கண்ணீருக்கும், இரத்தத்திற்கும், சந்தித்த பேரழிவுகளுக்கும் இந்த நாட்டின் அரசாங்கம் மட்டுமல்ல பௌத்த மகா சங்கங்களும் பதில் சொல்லியாக வேண்டும்.’’

(என இடதுசாரித் தலைவர் அஜித்ரூபசிங்க குரல் எழுப்பியுள்ளார்.)

கட்டுரையாசிரியர் மாதொருபாகன்

தினக்குரல்
டிச. 07, 1997

---

“இலங்கை ஆயுதப்படையினர் விடுதலைப் புலிகளுடனான போரை முடுக்கிவிட்டதன் மூலம் ஆயுதப்படையினரின் தமிழ்மக்கள்மீதான உரிமை மீறல்கள் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கின்றன. தமிழர் மீதான சித்திரவதை கொடூரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதப்படையினர் தமிழ் மக்களை சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்ட ரீதியில் படுகொலை செய்து வருகின்றனர்.’’

(அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட ஈழத் தமிழர் ஒருவரின் மேன்முறையீட்டு வழக்கில் லண்டன் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி டாக்டர் ஈ. ஏ. பிரின்ஸ் வழங்கிய தீர்ப்பிலிருந்து)

தினமுரசு
டிச. 07 – 13, 1997

---

இராணுவத்தினர் என்னைத் துப்பாக்கியால் அடித்து நான் விழும்வரை தாக்கினார்கள். பின் எனது கைகளையும் கால்களையும் ஒன்றாகக் கட்டினார்கள். எனக்கு சுவாசிப்பதே கஸ்ரமாக இருந்தது.

அதன் பின்னர் அவர்கள் எனது கழுத்தில் ஒரு துணியைச் சுற்றி அதை இருபுறமும் இழுப்பதன் மூலம் எனது கழுத்தை நெரித்தார்கள். இதன் பின் துவக்கில் பூட்டப்பட்டிருந்த கத்தி மூலம் என்னை வெட்டினார்கள். ஒரு இராணுவத்தான் எனது முதுகில் ஆறு இடங்களில் கத்தியால் குத்தினான். இதன் பின் எனது கழுத்தை கத்தியால் வெட்டினார்கள், எனது கழுத்தைச் சுற்றி துணி இருந்ததால் அது எனக்கு பெரிய காயத்தை ஏற்படுத்தவில்லை. இதன் பின் ஒருவன் எனது தலையில் வெட்டினான். இது எனக்கு பலத்த காயத்தைக் கொடுத்தது. நான் நினைவிழந்தேன்.

இந்த நிலையில் எனது கைவிரலில் இருந்த இரு மோதிரங்களை கழற்ற அவர்கள் முயல்வதை என்னால் உணர முடிந்தது. அது முடியாமல் போகவே அவர்கள் எனது இரு விரல்களையும் வெட்டினார்கள். நான் திரும்பவும் உணர்விழந்தேன்.

எனக்கு உணர்வு வந்தபோது நான் ஒரு மலகூடக் குழிக்குள் வீசப்பட்டிருப்பதை உணர்ந்தேன். அங்கிருந்த பூச்சிகள் எனது காயங்களைக் கடித்த வலியில் நான் கத்தினேன்.. —...

(சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் (நவம்பர் 1997) வெளியிட்ட அறிக்கையிலிருந்து)

சரிநிகர்
டிச. 04 – 17, 1997

---

**கேள்வி:-** யாழ்ப்பாண சமூகம் இன்றைக்கு எப்படியிருக்கிறது?

**பதில் :-** உருத்தளர்ந்த ஊர்கள், உலகெல்லாம் பிரிந்த உறவுகள், மறக்கப்பார்க்கிற மனித விழுமியங்கள், தெரு ஒழுங்கு தெரியாத வாகனங்கள், பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளை பத்திரிகையில் விளம்பரம் போட்டுப் பாராட்டும் போட்டிகள், களவு, கசிப்பு, விடாமல் ஓடும் வீடியோக்கள் .. இன்னபிற. இத்தனைக்குமிடையில் இயல்பான உழைப்பும், இன்னமும் இறங்காத ஓர்மமுமாய் சனங்கள், அவர்களில் நாங்களும்.

எழுத்தாளர் சாந்தன்

தினக்குரல்
டிச. 14, 1997

# விபரீத அவலம் நிரம்பிய விசித்திரக் கதை

சந்தேகமே இல்லை; சந்திரிகா அம்மையார் அடுத்த நூற்றாண்டிற்குள் சிங்களவரை அழைத்துச் செல்லவே பிறப்பெடுத்தவர் என்பதில் இன்று எவருக்கும் எள்ளளவும் சந்தேகமேயில்லை. Cyperspace எனப்படும் அறிவியல் மாய உலகிற்குள் இவ்வுலகம் பயணிக்கும் காலகட்டத்தில், அம்மையார் சிங்களவரை வேறொரு மாய உலகிற்குள் தள்ளிவிட முனைகின்றார். மனிதரின் சிந்திக்கும் ஆற்றலின் மையமான மூளையின் நரம்புத் தொகுதியை இணக்கப்படுத்தி அறிவியல் வல்லுனர்கள் இதனைச் சாதிக்கையில், சந்திரிகா அம்மையார் சிங்களவரின் சிந்திக்கும் ஆற்றலை இலக்கு வைத்து தாக்கி – அதனை மழுங்கடித்து, இருண்மையும் பொய்மையும் நிரம்பிய மாய உலகிற்கு இட்டுச் செல்கின்றார்.

அந்த உலகத்தில் புலிகள் இல்லை; போரில்லை; இனச்சிக்கலில்லை; அம்மையார் கொடுத்த வாக்குறுதிகள் பற்றி கேட்பாரில்லை; மொத்தத்தில் சிறிலங்கா, சிங்கப்பூர் போலவும் சிங்களவர்கள் தேவர்கள் ஆகவும் வாழும் உலகமிது. இதற்காக அம்மையார் செய்வது ஒன்றே ஒன்றுதான்: உண்மையைப் போல தோற்றமளிக்கும் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு அவ்வப்போது பொருத்தமான– முற்றிலும் முரண்பட்ட குழப்பகரமானதாக வடிவமைக்கப்பட்ட அறிக்கைகளை வெளியிடுவதுதான் அவரது பணி. இவ்வறிக்கைகளை தயாரிக்க இரவு பகலாக முழுமூச்சாக நீலன், கதிர்காமர், பீரிஸ் தலைமையிலான வல்லுநர் குழுவொன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. புலிகளோடு பேசி போரை நிறுத்துவேன் என முன்னர் கூறத் தொடங்கிய காலம் தொட்டு இன்றுவரை அவர் செய்தது, செய்வது, செய்யடபோவது இது ஒன்றே தான். இதன் விளைவு என்னவென்றால், சிந்திக்கும் ஆற்றலை அடகு வைத்த சிங்களவர், எப்போதுமே அம்மையாரின் அடுத்த அதிகார அறிவிப்புக்காக காத்து நிற்குமொரு உளவியல் சிக்கலில் சிக்குப்பட்டமை தான்.

ஆனால், இங்குள்ள விபரீத அவலம் என்னவென்றால், அம்மையாரின் சுண்டுவிரலிலே குந்தியிருக்கும் தமிழ்க் குழுக்கள் அம்மையாரின் அடுத்த அறிக்கைக்காக காத்து நிற்பதோடு நின்றுவிடாமல், தாங்களும் தம் பங்கிற்கு அறிக்கைகள்விட ஆரம்பித்து விட்டமைதான். அவிவேக பூரணகுருவும் அவரது மூடச் சீடரும் போலாகிவிட்டது இக்கதை. போரிலிருந்து பொருண்மியம் வரை பொதியிலிருந்து பொதுமக்கள் ஆதரவு வரை எல்லாமே ஏறுக்கு மாறாகி தேக்க நிலையில் தேங்கிய பின், அம்மையார் இப்போது அடுத்த அதிரடி அறிவிப்பை அவிழ்த்து விட்டுள்ளார். யாழ் மாநகரசபை உள்ளிட்ட 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் என்பது தான் அது. எப்படிப்பட்டதொரு அறிவிப்பீது?

வே. பாலகுமாரன்

மிக நீண்டகாலமாகவே செய்வதறியாது திகைத்து நின்ற தமிழ்க் குழுக்களெல்லாம் இதையடுத்து உயிர்ப்புப் பெற்றன. அடுத்தடுத்து தமிழ் மக்களை சிந்திக்க வைக்கவே நேரமில்லாத அளவிற்கு அடுக்கடுக்காக அறிக்கைகளை வெளியிட்டன. ''இந்த நிலையில் தேர்தல் ஒரு கேடா?'' என்றது ஒரு குழு. ''இத்தேர்தல் தமிழ்மக்கள் மேல் திணிக்கப்பட்டதொன்று'' என்றது இன்னொரு குழு. இதன் பின்தான் உச்சக்கட்ட அறிக்கை எல்லோரதும் ஏகோபித்த அறிக்கையாக வெளிவந்தது. "தேர்தல்களை தள்ளிப் போடுமாறு கேட்டுள்ளோம். ஆனால் அரசு தள்ளிப்போடாது என்பது ஏற்கெனவே எமக்குத் தெரியும். எனவே தேர்தல்களில் நிற்கின்றோம்.'' இவை எல்லாவற்றையும் ஏப்பம் விட்ட அறிக்கையொன்றை இன்னொரு தமிழ்க்குழு இறுதியாக வெளியிட்டது. ''.. திசை தெரியாது, ஐக்கியப்பட்ட இலங்கைக்காக தமிழ் பேசும் மக்கள் தாயகத்தை தாரைவார்க்கக் கூட இவர்கள் (ஏனைய தமிழ்க்குழுக்கள்) தயாராகிவிட்டனர். தமிழ் தேசிய இனத்தின் பறிக்கப்பட்ட தேசிய உரிமைகளை தாபிப்பதற்கு யாழ்குடா உள்ளூராட்சி தேர்தல்களில் கலந்து கொள்வது தவிர்க்க முடியாத(?) அரசியல் போராட்டம் (?) என்பதனை அதன் சகல பரிமாணங்களிலும் (?) நம்புகின்றோம்; ....மாநில சுயாட்சியை வழங்க முன்வராத, மரபுவழி தாயகத்தை கூறு போட முனையும் அரசின் பொதியை நிராகரிக்க, அரசின் அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க–இவற்றினை முழு உலகிற்கும் அறிவிக்கும் ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பாக (?) இத்தேர்தலை கணிக்குமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொள்கின்றோம்.'' இப்போது சொல்லுங்கள்; அம்மையாரையும் மிஞ்சிவிட்டார்களல்லவா இவர்கள். ஆனால் இவர்களுக்கு இவ்வித்தையைக் கற்றுக் கொடுத்த அம்மையார் எப்படிப்பட்டவர்? அம்மையாரின் பாரிய ஏமாற்று அரசியல் சதித்திட்டத்தின் ஒருபகுதியே இவர்களல்லவா?

தற்போது நான்கு இலட்சம் மக்கள் வாழும் யாழ்குடாவில் வாக்காளர் 5,64,021 பேராம். இதில் புதிதாக மேலும் 24,000 பேர் சேர்க்கப்பட்டிருக்கின்றார்களாம்; எப்படியிருக்கின்றது கதை? மோசடிகளில் கைதேர்ந்த ஐ. தே. கட்சியே வாக்காளர் இடாப்புக்களை நம்ப முடியாது என்கின்றது.

எனவே இத்தேர்தலை 'எவ்விதமேனும்' நடத்தி முடித்தபின்னர் அம்மையார் உலகிற்கு கூற உத்தேசித்திருப்பது என்ன? அதை இப்போதே எவராலும் கூற முடியும். யாழ்குடாவில் காணாமல் போன 700 பேரும் உண்மையிலே காணாமற் போகவில்லை என்பதை யாழ் மக்களே ஏற்றுக் கொண்டுவிட்டனர்; தனது தீர்வுப் பொதியை மட்டுமல்லாது அதனை நிறைவேற்ற வக்கில்லாது – முடிவில்லாது இழுத்தடிப்பதை கூட தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டனர்; தமிழ்மக்களுக்கெதிராக மிகப்பாரிய அளவில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புப் போரை, தம்மை ''விடுவிப்பதற்கான போர்'' என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இவற்றினை விடவும் இன்னொரு அதிரடி அறிவிப்பையும் பிரகடனப்படுத்த அவர் தயாராக இருக்கின்றார். தமிழ்பேசும் மக்களின் விடிவின் சுடரொளியாக விடுதலை உணர்வின் வீறு கொண்ட வடிவமாகிவிட்ட புலிகளின் தலைமை, எப்போதோ தமிழ் மக்களின் தலைமையை பொறுப்பேற்றுவிட்ட நிலையில், அத் தலைமையை இராணுவ ரீதியில் அழிக்க முடியாத நிலையில், அரசியல் ரீதியாக அத்தலைமையை புறம் தள்ளவே இப்பிரகடனம். அரசியல் அடைமொழியில் மிதவாதிகள் எனப்படும் சமரசவாதிகளைக் கொண்ட மாற்றுத் தலைமையொன்று தமிழர் மத்தியில் உருவாகிவிட்டது என்பதைக் காட்டவே, இத்தேர்தல் முழுமையாக பயன்படும் என அம்மையார் நம்புகின்றார். இரண்டாம் உலகப் போரின் போது கிட்லர் காட்டிய பாதையிது. தென் பிரான்சை அப்போது ஆக்கிரமித்த கிட்லர், அதனை நிருவகிப்பதற்காக பொம்மை அரசொன்றை விசி (Vichy) நகரில் அமைத்தான். பிரான்சு பிரான்சியராலே நிருவகிக்கப்படுவது போன்ற பொய்மைத் தோற்றத்தை உருவாக்கவே இத்திட்டம். இன்று வரலாற்று அகராதியில் 'விசி' அரசாங்கம் என்றால் ஏவல் நாய்களின் – எடுபிடிகளின் பொம்மலாட்ட அரசு என்றே பொருள்படும்.

இத்தகைய அரசியல் சடுகுடுக்கள், வாரோட்டங்கள் எப்படியிருந்தாலும் இத்தேர்தல் அறிவிப்பானது எம் மக்களுக்கும் அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கும் பேருண்மையொன்றை புலப்படுத்தி நிற்கிறது. வரலாற்றின் தீர்க்கமான பக்கங்களில் எம்மக்கள் கால்பதிக்கின்றனர். அவர்களது தேசிய விடுதலைப்போராட்டம் தீர்க்கமான திருப்பு முனையொன்றை நோக்கி பயணிக்கின்றது என்பதனை உணர்ந்து, உலகமே உற்று நோக்குகையில் வரலாறு ஒரு அற்புதமான சமன்பாட்டை முன் வைக்கின்றது. தமிழ் மக்களை ஏமாற்ற சிங்களத் தரப்பினர் இதுவரை எடுத்த சகல முயற்சிகளும் முற்றுப் பெறும் காலகட்டத்தில், மிதவாதம் என்கிற பெயரில் சமரசவாத - துரோகத்தன அரசியலின் முழுவட்டமும் இப்போது பூரணமாக்கப்படுகின்றது.

ஏனெனில் 1970 களின் பின்னர் சிங்களத்தின் சேரழிந்த அரசியல் சேற்றிலிருந்து தம்மைவிடுவிக்கும் பணியை தொடங்கினர் எம் மக்கள். 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் திட்ட புறக்கணிப்போடு தொடர்ந்த இப் பணி, சிங்கள அரசுகளால் வீசியெறியப்படும் எச்சில் எலும்புத் துண்டாகும் தேர்தல் வழி பதவியாசை மோகங்களை கைவிட்டு தம்மை நிலை நிறுத்தும் வரை தொடர்ந்தது. 1974 சனவரி பத்தாம் நாள் தமிழாராச்சி படு கொலைகட்கு பின்னணியில் செயற்பட்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வடமாகாண அமைப்பாளராகி, துரோகத்தனத்திற்கு பரிசாக யாழ் மாநகர சபை மேயரான அல்பிரட் துரையப்பாவின் கணக்கு தீர்க்கப்பட்ட போது தரைக்கும் வானத்திற்கும் எம்பிக் குதித்தவர் எம் மக்கள். 1983 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்களை வடக்கில் நடத்த ஐ. தே. கட்சி முடிவெடுத்தபோது, ஓடோடிச் சென்று அதற்கு முண்டு கொடுக்க தமிழர் விடுதலைக் கூட்டணி முயன்றபோது இவர்கள் யாவருக்கும் பட்டை நாமம் போட்டு எம்மக்களில் 95% விழுக்காட்டினர் அத் தேர்தல்களை புறக்கணித்தனர். அன்றோடு மிதவாத அரசியல் முடிவிற்கு வந்தது. வரலாறு திருத்தியெழுதப்பட்டது.

ஆனால், இன்று அதே யாழ் மாநகரசபை மேயருக்காக, அதே உள்ளூராட்சி மன்றக் கதிரைகளுக்காக தமக்குள்ளே முட்டி மோதி போட்டி போடுகின்றவர்கள் யார்? இந்த விசித்திர விபரீத அரசியலின் முடிவு எவ்வாறிருக்கப் போகின்றது? ஆனால் '' தமக்கு முன்னிருந்த ஆசியாவின் மிகப் பலம் வாய்ந்த கரந்துறைப் படைகள் போல முடிவற்ற பொறுமையுடன் '' ( நியுஸ்வீக் 8 .12 .97 ரொனி கிளிங்டன் ) காத்திருக்கும் புலிகள் முன் இத்தகைய முயற்சிகள் '' வீம்பு முற்றிய சாத்தானின் ...... மீளவழி ஏதுமற்ற '' செயற்பாடுகள் அல்லவா? இவை இவ்வாறுதான் முடிவிற்கு வரும் என்பது எவ்வாறோ எமக்குத் தெரிந்த விடயமும் அல்லவா?

O





# களுத்துறை பூட்டிய சிறைப்படுகொலை.

கொலைவெறி தலைக்கேறிய நிலையில் - தமிழர்களைப் படுகொலை செய்யும் போது - இனவெறிக் கோசம் எழுப்புவது சிங்களக் காடைத்தனத்தின் ஒரு பண்பு.

'' எல்லாத் தமிழர்களையும் கொல்லுங்கள் '' இது 83 கறுப்பு யூலையில் ஈடுபட்ட பிக்குகளின் கோசம்.

'' இந்தக் கண்களா தமிழீழத்தைப் பார்க்கப்போகின்றன '' இது வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் போது குட்டிமணியின் கண்களைத்தோண்டி எடுத்த சிங்களக் காடையர்களின் ஏளன வெறிக் கோசம்.

இதுபோல 12.12.1997 அன்று களுத்துறைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது கொலைத் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. '' ஜயசிக்குறுயில் எங்களது இராணுவம் அழிகின்றது. உங்களுக்கு நாங்கள் உணவு தரவேண்டுமா '' என்று வெறிக் கூச்சலிட்டபடி சிங்கள தீங்கியல் (கிறிமினல்) கைதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதுபோன்ற இனக்கொலைத் தாக்குதல்கள் சிங்களக் காடையர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் அல்ல. மாறாக, இவை, அதிகார பீடத்தில் திட்டமிடப்பட்ட கொலைத்தாக்குதல்களே ஆகும்.

சிங்கள அரசின் அனுசரணையுடனும் - பேரினவாத அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரிலும் அதிகாரபீடத்தின் ஏவுதலுடனும் இப் படுகொலைகள் நடைபெறுகின்றன என்பது ஏற்கெனவே நிருபணமான உண்மை.

களுத்துறைச்சிறையிலும் அதுவே அரங்கேறியுள்ளது.

உரிமைக்காகப் போராடுவது சிங்களப் பேரினவாதத்தால் சகிக்க முடியாத ஒரு ' குற்றம்.'' போராட்டத்தை ஒடுக்க படுகொலையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அதன் உளுத்துப்போன ஒரு தந்திரோபாயம். போராடினால் சாவு, சும்மா இருந்தால் அடிமை வாழ்வு என்பதுதான் தமிழினத்திற்கு பேரினவாதம் கூற விரும்பும் பாடம்.

களுத்துறைச் சிறைப்படுகொலைக்குப் பின்னாலும் ஒரு சிறைப்போராட்டம் இருந்துள்ளது. போராட்டத்திற்கான காரணி வழமையானதுதான். ''விசாரணைசெய் அல்லது விடுதலை செய்.'' 15 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக தமிழ் அரசியல் கைதிகளால் முன்வைக்கப்பட்டு நடாத்தப்படும் ஒரு சிறைக் கோரிக்கை இது. தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கரவாத தடைச் சட்டம் அமுலுக்கு வந்த நாளில் இருந்து, அந்த சட்ட விதிகளுக்கு அமைய, தமிழ் இளைஞர் - யுவதிகளை சிங்கள அரசு சிறையில் அடைத்து வருகின்றது. எந்தவித குற்றங்களுமிழைக்காமல் சிறைக்குள் வாடியபடி இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் முன்வைக்கும் நீதியான - சட்டபூர்வமான - ஒரு மனிதாபிமானக் கோரிக்கைதான் அது. பெரும்பாலும் உண்ணாவிரதம் அல்லது சிறை நடைமுறைகளுக்கு ஒத்துழையாமை என்பன போராட்ட வழிகளாக இருக்கும். இவை தட்டிககழிக்கப்படுமிடத்து கூரை மீதேறி சத்தியாக்கிரகம் செய்வது ஒரு உச்சவழி ஆனால், சட்டபூர்வ வழியில், இவ்விதம், சிறைப்போராட்டங்கள் நடைபெறும் போது, அதை, சிறை உடைப்பு அல்லது தப்பி ஓடும் முயற்சிக்கான சூழ்ச்சித்தந்திரம் என்று காரணம் கூறி தமிழ் அரசியல் கைதிகளை அடித்து - நொருக்கி சிறைப்போராட்டங்களை ஒடுக்க முயல்வது சிறை நிர்வாகத்தின் நடைமுறை.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமது கோரிக்கைகளை வலியுறுத்த - கூரை மீதேறிப் போராட்டம் நடாத்திய தமிழ் இளைஞர்களை தாக்கி கீழே வீழ்த்திவிட்டு களுத்துறைச் சிறைக்கு தண்டனை இடமாற்றம் செய்தனர். சிறைப் போராட்டத்தை முறியடித்தல் - அரசியல் கைதிகளை மிரட்டல் - செய்திகளை இருட்டடிப்புச் செய்தல் என்பன தண்டனை இடமாற்றத்தின் நோக்கங்கள் எனினும், களுத்துறைச் சிறையிலும் தமிழ் இளைஞர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இனக் கொலைத் தாக்குதலுக்கான சந்தர்ப்பமாக - சிங்கள வெறியர்கள் - அதைக் கருதினர். சிறைக்காவலர்கள் மற்றும் இராணுவத்தின் ஆதரவுடன் நிராயுதபாணிகளாக நின்ற தமிழ் அரசியல் கைதிகள் மீது, கத்தி, கோடாரி போன்ற ஆயுதங்கள் கொண்டு தாக்கினர். மூன்று தமிழர்கள் பலியாகினர் 20 பேர் படுகாயமடைந்தனர். இந்தக் கொலைத் தாக்குதலுக்குப் பின்னரும் சிறைப் போராட்டத்தை - தமிழ்க் கைதிகள் - தொடர்ந்து நடாத்தினர் என்பது குறிப்பிடுச் சொல்லக் கூடிய சிறப்பம்சம் ஆகும்.

சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடந்த இந்த சிறைப்படுகொலையை '' உணவு பரிமாறல் தொடர்பாக கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட சண்டை '' என்று சிறிலங்கா நீதித்துறை செய்தித்திரிபு செய்தது.

கொலைஞர் - கொள்ளையர் - பாலியல்குற்றம் புரிந்தோர் - மோசடிப்பேர்வழிகள் என்போரை தீங்கியல் குற்றவாளிகள் என்ற வகைக்குள் அடக்கி, அவர்களை அதிகளவு கட்டுப்பாட்டுடன் அடைத்து வைப்பதும் - அதீத கண்காணிப்புடன் நடாத்துவதும் சிறைவழமை. ஆனால், சிறைப் படுகொலைகள் நடைபெறும் வேளைகளில், இவர்கள் ஆயுதப்படையினர்போல சுதந்திரமாக நடமாடி, ஆயுதம் தரித்து தாக்குதலில் ஈடுபடும் அதிசயத்தை சிறிலங்காச் சிறைகளில் காணலாம்.

கோடாரி - கத்தி - மண்வெட்டி போன்ற வேலை ஆயுதங்கள் வைக்கப்படும் ஆயுதக்களஞ்சிய அறை மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். அதன் சாவிகள் பொறுப்பானவர்களின் கைகளிலேயே இருக்கும். வருடத்தின் முழுநாட்களும் சிறை அலுவலர்களிடம் இருக்கும் ஆயுத அறைச்சாவி, சிறைப்படுகொலை நாட்களில் மட்டும் சிங்களத் தீங்கியல் கைதிகளிடம் கைமாறும் அதிசயம் பற்றி - சிறிலங்கா நீதித்துறை - கவலைப்படுவதில்லை.

'' தாக்குதல் நடக்க சற்றுமுன்னர் சிறைக்காவலர் பயன்படுத்தும் ஊதுகுழல் சத்தம் கேட்டது'' என்றும், '' அதுதாக்குதலுக்கான சைகைஎன்றும்'' தாக்குதலில் காயமடைந்த தமிழ்க்கைதிகள் தெரிவித்திருந்தனர். ஊதுகுழல் ஒலித்ததும் சுமார் 400 சிங்கள தீங்கியல் கைதிகள் தமது இருப்பிடம் நோக்கி ஓடிவந்து - வெளிக்கதவை உடைத்து - தம்மைத் தாக்கியதாகவும், பாதுகாப்புத் தருமாறு சிறைக் காவலரிடமும் - இராணுவத்திடமும் மன்றாடியும் அவர்கள் பார்த்துக் கொண்டு நின்றனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். வெளிக்கதவை திறக்கவிடாது சுமார் அரைமணி நேரம் தாம் போராடியதாகவும், அவ்வளவு கால அவகாசம் இருந்தும் சிறை நிர்வாகம் எதுவும் செய்யவில்லை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர், இது சிறை நிர்வாகத்தின் அனுசரணையுடன் நடந்த ஒரு தாக்குதல் நடவடிக்கை என்பதை நிரூபிக்க மேலும் ஆதாரங்கள் தேவையில்லை.

ஆனால், வழமைபோலவே, சிறிலங்கா நீதித்துறை, தாக்குதலின் இனவெறிப் பரிமாணத்தை மறைப்பதற்காக சில தீர்மானங்களை அறிவித்தது. இம்முறை அது, பெரும் மனிதன்போல நடிக்கும் நீதி அமைச்சர் பீரிஸ் தலைமையில் கூடியது. ''இனிமேல் சிறைக்கலவரம் ஏற்படாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். கலவரத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். அரச செலவில் ஈமக்கிரியைகள் செய்யப்படும்'' என்று அறிவித்தது.

''விசாரணைசெய் அல்லது விடுதலைசெய் என்று திருவாளர் பீரிசின் சட்டநேர்மைக்கு - பெரும் மனிதத்தன்மைக்கு சவால் விடுத்த தமிழ் இளைஞர்களை சாவரக்கனிடம் ஒப்புக்கொடுத்துவிட்டு, பிணங்களை எரித்து உதவுகிறோம் - காசு கொடுத்து உதவுகிறோம் என்று அவர் சாதாரணமாக அறிக்கை விடுத்து, கொலைகளை மறைமுகமாக நியாயப்படுத்தியுள்ளார்.

உலக ஒப்புக்காக, ஆட்சியில் இருப்போர் சிலவேளை, இந்தப் படுகொலையைக் கண்டிக்கலாம், சம்பந்தப்பட்ட சிறை அதிகாரிகளுக்கு 'இடமாற்றம்' என்ற தண்டனை வழங்கலாம். தமிழர்களது கொலைகளுக்கு காரணமாக இருக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சிறிலங்காவில் கொடுக்கப்படும் உயர்ந்தபட்ச தண்டனை 'இடமாற்றம்' தான். அம்பாறை சென்றல் காம்ப் கிராமப் படுகொலையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிக்கும் இடமாற்றம் தான் தண்டனை. சில வேளைகளில், கொலைக்கான சூத்திரதாரிகளுக்கு பதவி உயர்வும் புகழாரமும் கொடுக்கப்படலாம். இலங்கை வரலாற்றில் இது புதிதல்ல. வெலிக்கடைப் படுகொலைகளுக்கு தலைமை தாங்கியவர்களுள் ஒருவனான சேபால ஏகநாயக்கா என்ற குற்றவாளிக்கு சன்மானமாக தண்டனைக் குறைப்பு செய்யப்பட்டதைப்போல, களுத்துறை சிறைப் படுகொலைக்கு தலைமை தாங்கிய சிங்கள தீங்கியல் கைதிகளுக்கு, சிலவேளை, தண்டனைக் குறைப்பு என்ற ஊக்குவிப்புவழங்கப்படலாம். எனவேதான், இத்தகைய படுகொலைகளை சிங்களக் கைதிகளின் வெறிச் செயல் என்ற மட்டத்துடன் மட்டும் வைத்துப் பார்க்கக் கூடாது. இது அதிகாரபீடத்தின் ஏவுதலின்பேரில் தீங்கியல் கைதிகள் நடாத்திய இனவெறிச் செயலாகும். ஆட்சியாளர்களும், மறைமுகமாக இவற்றை அங்கீகரிக்கின்றனர் என்பதே உண்மையாகும்.

சிங்களப்பத்திரிகை உலகமும் களுத்துறை சிறைப்படுகொலையை இருட்டடிப்புச் செய்துள்ளது. சிங்களமக்கள் எங்காவது கொல்லப்பட்டால் பக்கம் பக்கமாக படங்களுடன் கட்டுரை வெளியிடும் அவைகள், இந்தவிடயத்தில் திட்டமிட்டு மௌனம் சாதிக்கின்றன.

தமிழர்கள், கொழும்பில் கொல்லப்பட்டு வாவிகளில் வீசப்பட்டுக் கிடந்த போதும் அவை மௌனம் சாதித்தன. சிறைகளில் தமிழர்கள் கொலலப்படும் போது பேசாதிருக்கின்றன. தமிழர் கொலலப்பட்டால் சம்பவம். சிங்களவர் கொல்லப்பட்டால் சரித்திரம் என்பதுதான் அவற்றின் பத்திரிகா தர்மம்.

இத்தகைய தமிழர் படுகொலைகள் ஒரு விடயத்தையே தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகின்றன. அதாவது, சிங்களத்தின் ஆட்சிபீடம் - அதிகார அலகுகள் - தொடர்பு சாதன உலகம் அனைத்துமே தமிழினவிரோத உணர்வால் ஆட்பட்டுக்கிடக்கின்றன. இதில் எவற்றிடமிருந்தும், தமிழர், நீதியை எதிர் பார்கக முடியாது என்பதுதான். அதற்கு களுத்துறைச் சிறைப்படுகொலை ஆகப்பிந்திய உதாரணம். 0

**உரிமைக்காகப் போராடுவது சிங்களப் பேரினவாதத்தால் சகிக்க முடியாத ஒரு 'குற்றம்.' போராட்டத்தை ஒடுக்க படுகொலையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அதன் உளுத்துப்போன ஒரு தந்திரோபாயம். போராடினால் சாவு. சும்மா இருந்தால் அடிமை வாழ்வு என்பதுதான் தமிழினத்திற்கு பேரினவாதம் கூற விரும்பும் பாடம்.**

# யாழ்குடாநாடு - திறந்தவெளிச் சிறைப்படுகொலை

சிங்கள இராணுவத்தின் பிடிக்குள் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் ஒரு திறந்த வெளிச் சிறைக்குள் வசிக்கும் கைதிகள்போன்றே வாழ்க்கையை ஓட்டுகின்றனர். கேட்பார் தடுப்பார் இன்றி கைதுகளும், பாலியல் வல்லுறவுகளும், சூறையாடல்களும் நடக்கின்றன. இளைஞர்கள் காணாமல் போதல், அங்கே சர்வசாதாரணம். கண்ணுக்கு முன்னால் கைதுசெய்து - பின், கொன்றுவிட்டு தாங்கள் கைதுசெய்யவில்லை என்று கைவிரிப்பதும் – அல்லது விடுதலைசெய்து விட்டோம் என்று இருபொருள்பட பதில்கூறுவதும் சிங்களப்படையின் வழமை.

காணாமல்போகும் அவலச்செய்திகளும் அதனால் எழும் துயரக்கதைகளும் தென்தமிழீழத்தின் ஒவ்வொரு கிராமத்திலும், சொல்வதற்கிருக்கும். எஸ். ரி. எவ். இனர் கைதுசெய்தால் அது காணாமற்போனதற்குச் சமன். 1984 இன் பிற்பகுதியில் அங்கே ஆரம்பமான காணாமல் போதல் இன்றுவரை தொடர்கின்றது. பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் (1990 93) காணாமல் போதல் உச்சநிலைக்குச் சென்றிருந்தது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் மட்டக்களப்பு அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கிய தென்தமிழீழத்தில் காணாமல்போயுள்ளனர்.

டியதால் தமது கொலைவெறியை – அரசபடைகள் - அடக்கி வாசிக்க வேண்டி வந்துவிட்டது. அப்படியிருந்தும் கடந்த ஒன்றரைவருடத்தில் 761 பேர் காணாமல் போனோராக பதியப்பட்டிருப்பது கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

காணாமல் போனோரை கோட்டரீதியாகப் பிரித்துப்பார்க்கும்போது வலிகாமப் பகுதியில் இருந்தும் தென்மராட்சிப்பகுதியில் இருந்தும் அதிகளவிலானோர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனோரை வயதுரீதியாக வகுத்துப் பார்க்கும்போது 30 வயதுக்கு உட்பட்டவர்களே சிங்களப்படையின் பிரதான இலக்காக இருந்துள்ளது தெரிகின்றது. அதாவது போராட்டசக்தியை சிங்களப்பேரினவர்தம் குறிவைத்துள்ளது.

## காணாமல்போனோர்:கோட்டரீதியாக

| வலிகாமம் | வடமராட்சி | தென்மராட்சி | மொத்தம் |
|---|---|---|---|
| 419 | 18 | 324 | 761 |

இராணுவ ஆட்சியின் ஓர் அம்சம் காணாமல்போதல். ஆனால், காணாமல்போகச்செய்வித்தல் இன அழிப்பின் ஓர் அம்சம். தமிழீழத்தைப் பொறுத்தவரையில், காணாமல்போதல் என்பது தமிழின அழிப்பின் ஓர் செயற்பாடாகவே நடாத்தப்படுகின்றது தென்தமிழீழத்தில் இது உச்சநிலையில் இருந்ததற்கு ஒரு காரணம் உண்டு. தென்தமிழீழத்தின் சனத்தொகையில் தமிழ்மக்களின் விதாசாரத்தை . நன்றாகக் குறைத்து - அதை சிங்களவர் மாகாணமாக மாற்றுவதே அதுவாகும். இதேவேளை, இளம் விதவைகளை உருவாக்கி, சிக்கலான சமூகப் பிரச்சனைகளை உருவாக்கும் கொடூர திட்டத்துடன். இளம் குடும்பத்தலைவர்களை எஸ். ரி. எவ். குறிவைத்து - காணாமல் போகச்செய்தது. மேலும், இனக்கொலையுடன், ஒரு பய உளவியலை எஞ்சிய தமிழ்மக்கள் மனதில் பதிய வைத்து – அரசியல் ரீதியாகப் பணியவைக்கும் நோக்கமும் அந்தச் செயற்பாட்டில் உண்டு.

இப்போது, யாழ்குடாநாடும் காணாமல் போவோர் பூமியாகிவிட்டது. குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டு - கடந்த ஒன்றரை வருடத்தில் மட்டும், காணாமல் போனோரில் 761 பேரினது பூரணவிபரம் பதியப்பட்டுள்ளது. இராணுவக் கெடுபிடிகளுக்குள்ளே–எவ்வளவோ ஆபத்தற்கும் மத்தியில் 761 பேரினது பூரணவிபரம் பதியப்பட்டது அரியசெயல் தான். எனினும், வெளித்தெரியாமல் பலநூறுபேர் பதியப்படாது இருக்க சாத்தியங்கள் உண்டு.

குடாநாட்டில் காணாமல் போனோர் கொல்லப்பட்டுவிட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தீர்ப்புக் கூறியுள்ளது. கொல்லப்பட்டோரின் உடல்களை புதைத்து -மறைத்தும் - உலங்குவானூர்தி மூலம் கடலில் வீசி எறிந்தும் கொலைத்தடயங்களை – சிங்களப்படை – அழித்துள்ளது. கடலில் வீசப்பட்ட சடலங்களில் ஒன்பது உடலங்கள் சிதைந்தநிலையில் சுண்டிக்குளம் கடற்கரையில் (முல்லைத்தீவு கடற்பரப்பு) ஒதுங்கியிருந்தது பழையசெய்தி. சில அனாமதேயப் புதைகுழிகளும் - குடாநாட்டில் – மக்களால் கண்டுபிடிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டிருந்ததும் அனைவரும் அறிந்த செய்தி. தென்தமிழீழத்தில் காணாமல் போன தொகையைவிட கூடுதலானோரை, குடாநாட்டில் காணாமல் போகச்செய்விக்கும் ஆசையுடன் அரசபடைகள் இருந்திருக்கும். ஆனால், மக்களை வெளியேற்றிவிட்டு - வலிகாமத்தில் – சமரை நடாத்திய புலிகள் இயக்கத்தின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, மக்கள் அழிவை – காணாமல் போவோர் தொகையை பெரிதும் குறைத்துள்ளது. இல்லையென்றால் போரைக் காரணம் காட்டியும் – புலியைப் பிடித்தல் என்ற போர்வையிலும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை, அரசபடைகள் கொன்றொழித்திருக்கும்: அத்துடன் குடாநாட்டு நிலைமை தொடர்பாக உலகநாடுகள் மட்டத்திலும் - மனித உரிமை அமைப்புகள் ஆகியனவும் அதிக அக்கறை காட்டியதால் தமது கொலைவெறியை

இதேவேளை, 'சத்ஜய' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர்-கிளிநொச்சிமாவட்டத்தில்– 1996 யூலை மாதத்தில் இருந்து 1997 மே மாதம் வரை 73 பேர் காணாமல் போயுள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. தத்தமது வீடுகளைப் பார்க்கச் சென்றோர் மற்றும் குடும்பத்தின் உணவுத் தேவையை பூர்த்திசெய்ய எதையாவது எடுத்துவரமுயன்று- இராணுவத்திடம் சிக்கியோருமே பெரும்பாலும் இங்கே காணாமல் போயுள்ளனர். இத்தகைய வேலைகளுக்காக, பொதுவாக குடும்பத்தலைவர்கள் அல்லது நடுவயதைத் தாண்டியோரே செல்வது வழமை. இராணுவத்திடம் பிடிபட்டாலும் கொலைசெய்யாது விட்டு விடுவார்கள் என்ற தப்பாசைதான் அதற்குக் காரணம். இதனாலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் போனோரில் பெரும்பாலானோர் 30 வயதிற்கும் மேற்பட்டவர்களாக உள்ளதை காணலாம்.

## காணாமல்போனோர்:வயதுவாரியாக

| வயது | எண்ணிக்கை |
|---|---|
| 25 வயதிற்கு உட்பட்டவர்கள் | 486 |
| 26-30 வயதிற்கு உட்பட்டவர்கள் | 149 |
| 31-40 வயதிற்கு உட்பட்டவர்கள் | 97 |
| 40 வயதிற்கு மேல் | 29 |
| மொத்த எண்ணிக்கை | 761 |

## கிளிநொச்சிமாவட்டம்

### காணாமல்போனோர்:வயதுவாரியாக

| வயது | எண்ணிக்கை |
|---|---|
| 25 வயதிற்கு உட்பட்டவர்கள் | 20 |
| 26-30 வயதிற்கு உட்பட்டவர்கள் | 09 |
| 31-40 வயதிற்கு உட்பட்டவர்கள் | 21 |
| 40 வயதிற்கு மேற்பட்டோர் | 23 |
| மொத்த எண்ணிக்கை | 73 |

1996 யூலையிலிருந்து 1997 மே வரை

வன்முறை அரசியலின் துயரவிளைவுகளை சோக உணர்வுததும்ப எடுத்து விளக்கி – வாக்குக்கேட்டு – பதவிக்குவந்த சந்திரிகா அம்மையார், இப்போது, தமிழரின் துன்பியல் கதைகளுக்கு களம் அமைத்து, தமிழர் நிலத்தை கொலைக்களமாக்கி வருகின்றார். காணாமல் போனோரின் இரத்த உறவுகள் எத்தனையோ கவன ஈர்ப்பு நடவடிக்கைகளை நடாத்தி விட்டன. ஆனால், சந்திரிகா அரசாங்கமோ காணாமல் போய்விட்டனர் என்பதையே மறுக்கின்றது.

சிங்களப் பேரினவாதத்திற்கு முண்டுகொடுக்கும் தமிழ்க்குழுக்கள், காணாமல் போனோரை தங்களது சுயநல அரசியல் தம்பட்டத்திற்குப் பயன்படுத்துகின்றன. சந்திரிகா அரசாங்கமும், உள்நோக்கத்துடன், தமிழ்க்குழுக்களை உற்சாகப்படுத்துகின்றது. தமிழரைக்கொல்வதற்கு தனது படையினரைப் பயன்படுத்திக்கொண்டு – கொலைகளைக் கண்டிப்பதற்கு தமிழ்க்குழுக்களையும் அனுமதித்துக்கொண்டு - சந்திரிகா அரசாங்கம் தனது பேரினவாத நோக்கங்களை நிறைவேற்ற முயல்கின்றது. அதாவது, தமிழ்இன அழிப்பும் நடக்கின்றது – ஜனநாயக ஆட்சி என்ற பெயரும் உலக அரங்கில் கிடைக்கின்றது. அத்துடன், தனது அடிவருடிகளான தமிழ்க் குழுக்களை, தமிழ்மக்களில் அக்கறைகொண்ட தமிழரின் அரசியல்தலைமை என்று முத்திரை குத்துவிக்கவும் சந்திரிகா அரசாங்கம் முயல்கின்றது.

இதேபோன்றுதான் களுத்துறைச் சிறைப்படுகொலையை மறைமுகமாக அங்கீகரித்துக் கொண்டு, அதேவேளை, அங்குள்ள தமிழ்க்கைதிகளைப் பார்த்துப்பேச தமிழ்க்குழுக்களின் தலைவர்களுக்கு அனுமதியும்வழங்கி, சம்பவத்திற்கு உடன்நடவடிக்கை எடுத்ததுபோல அவர்களைக் கொண்டே உலகிற்கு சொல்லவைத்துவிடும் தந்திரத்தை சந்திரிகா அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது.

83 யூலை வெலிக்கடைப்படுகொலை நடந்தபோது, உலக சமூகம், ஜே. ஆர். அரசாங்கத்தை அதற்காகக் கண்டித்திருந்தது. ஆனால், களுத்துறை சிறைப்படுகொலைக்கு அல்லது குடாநாட்டில் காணாமல்போனோர் தொடர்பாகவோ சந்திரிகா அரசாங்கத்தை உலக சமூகம் வன்மையாகக் கண்டிக்கவில்லை.

ஏனென்றால், ஜே. ஆரின் வெளிப்படையான இனவாத அணுகுமுறைகள் அரசாங்கத்தின் அனுசரணையுடன்தான் அப் படுகொலைகள் நடந்தன என்று காட்டிக்கொடுத்தன. ஆனால், சந்திரிகா அம்மையாரின் அரசியல் சித்து விளையாட்டுக்களும் – தமிழ்குழுக்கள் மற்றும் உதிரித்தமிழர்கள் சிலரினதும் ஒருமித்த ஆதரவும் - அம்மையாரின் அரசாங்கத்தை - இனவெறிக் குற்றச்சாட்டுகளில் இருந்து பாதுகாக்க உதவுகின்றன.

ஆயினும், தனது பேரினவாதமுகத்தை, அம்மையார் நீண்டநாட்களுக்கு – உலகிற்கு – மறைக்கமுடியாது. களுத்துறை பூட்டியசிறைக்குள் நடந்த தமிழர்வதை மற்றும் குடாநாடு திறந்தவெளிச்சிறையில் காணாமல்நடக்கும் படுகொலைகள், சந்திரிகாவின் கொடூர ஆட்சியை உலகிற்கு புலப்படுத்தியபடி உள்ளன. O

# ஜயசிக்குறுயின் கடிவாளம்
# இராணுவத் தலைமையின் கையிலா!



கடந்த மே 13 அதிகாலை ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை சிங்களப் படைகள் ஆரம்பித்திருந்தன.

வெசாக்கிற்கு முன்னர் ( 22.05.1997 ) முடிக்கப்படும் என்று காலக்கெடு விதித்து ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் காலஎல்லை - இப்போது - சுதந்திரதின பொன்விழாவுக்கு முன்னர் [ பெப். 4, 98 ] என்று காலநீட்சி செய்யப்பட்டுள்ளது.

இராணுவநடவடிக்கை தொடங்கப்பட்ட நாளில் இருந்து வெசாக் வரையுள்ள 10 நாட்களில் இலக்கை அடைந்து முடிவு பெறும் என்று இராணுவ தலைமைப்பீடத்தால் கணிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, இப்போது, 225 நாட்களையும் கடந்து தொடர்கின்றது. ஜயசிக்குறுயின் கடிவாளம் இராணுவத்தரப்பிடம் இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

மன்னார் பாதைவழியே நகர்ந்த 'எடிபல' இராணுவநடவடிக்கைக்கு எதிராக புலிகள் இபக்கம் கடைப்பிடித்த தந்திரோபாய சமர்த்தவிர்ப்பு, சிங்களத் தலைமைக்கு வேறுவிதமாகத் தெரிந்தது. இந்தத் தவறான புரிதல் ஜயசிக்குறுயிக்கான சமர்த்திட்டத்தை வகுக்க துணைபோனது,

இப்போது, சிங்களதேசத்துப்படைகளில் பெரும்பகுதி ஜயசிக்குறுய்வலையில் சிக்கி - வன்னிச்சமர் முனைகளில் - கட்டுண்டு கிடக்கின்றது.


மொத்தம் மூன்று டிவிசன்கள் [ ஒவ்வொன்றும் 9000 பேர் ] ஜயசிக்குறுய் சமரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த டிவிசன் பிரிப்பிற்குள், இச்சமரில் பங்கேற்கும் பொலிசார் - கடற்படையினர் - கொமாண்டோ படையினர் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 4000 பொலிசார் ஜயசிக்குறுயிக்கென்று ஆயுதபாணிகளாக்கப்பட்டனர் என்று ரதவத்த அறிவித்திருந்தார். இதேவேளை, சிறப்புப்படைகளாக சில ஆயிரம் கொமாண்டோ படையினரும் சமரில் ஈடுபடுத்தப்படுகின்றனர். கணிசமான அளவு கடற்படையினரும் - தொண்டர் படையினரும் பயன்படுத்தப்படுகின்றனர். இந்தவகையில் பொலிஸ், கடற்படை, கொமாண்டோப்படை, தொண்டர்படை என்று மேலும் ஒரு டிவிசன் படை ஜயசிக்குறுயில ஈடுபடுத்தப்படுகின்றது.

ஆகவே, மொத்தம் நான்கு டிவிசன்கள் - அதாவது முப்பத்தாறாயிரம் ( 36, 000 ) படையினர் - வன்னிச்சமரில் பங்கேற்கின்றனர்.

இதேவேளை, இந்த 225 நாள் சமரில் சுமார் 3000 படையினர் பலியாகியுள்ளனர். 7000 படையினர் படுகாயமடைந்துள்ளனர். அதாவது, ஒரு டிவிசன் படையினர் ஜயசிக்குறுயில் அழிந்துள்ளனர். நாள்தோறும் அழியும் படையினரது இடத்தை நிரப்பவென, துருப்புக்களைப் புதிதாக அனுப்பும் பணியில் சிங்களப்படைத் தலைமை, பல இடர்களைச் சந்திக்கின்றது. துருப்புக்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய, இராணுவம் சிரமப்படுகின்றது. இந்த ஆட்பற்றாக்குறையையும் அதைப் பெறுவதில் இராணுவம் சந்திக்கும் சிரமங்களையும், கொழும்பு பத்திரிகைகள் வெளிப்படுத்துகின்றன.

குடாநாட்டிற்கு தரைப்பாதை அமைப்பது ஜயசிக்குறுயின் இராணுவ இலக்கு. மாங்குளத்திற்கூடாக வவு - கிளி பிரதான பாதையை கைப்பற்றுவது திட்டம். ஆனால், இந்தப்பாதை நெடுகிலும் படையினர் சந்தித்த பேரழிவுகளாலும் - புளியங்குள சண்டையில் புலிகள் காட்டிய போர்த்திறனினாலும் நகர்வுப்பாதையில் மாற்றம் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு சிங்களப்படைத்தலைமை உட்பட்டது. கரப்புக்குத்தி - வீஞ்ஞானகுளம் ஊடாக கரிப்பட்டமுறிப்புவரை ஒரு புதிய மார்க்கத்தில் நகர்ந்து, பழைய கண்டிவீதியில் குந்திக்கொண்டது.




கடிவாளம் கைதவறிய பகுதிகள்

இதன் காரணமாக, தரைப்பாதை என்பது பழைய கண்டி வீதி மார்க்கமாகவா! அல்லது பிரதான பாதையூடாகவா! என்ற கேள்விகள் - கொழும்பு இராணுவ விமர்சகர்களால் எழுப்பப்பட்டன. ஆயினும், இந்தப் புதிய நகர்வும் - கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் மீது நடந்த புலிகளின் பாய்ச்சல்களினால் நிலைகுலைந்தது. புதிய நகர்வொன்றின் மூலம் ஜயசிக்குறுயின் கடிவாளத்தை கையிலெடுக்க முயன்ற இராணுவத் தலைமை இயலாமையில் விழ்ந்தது.

இதன் பின்னர், புதூர்சந்திக்கு மேற்காக – மன்னகுளத்தினூடாக –மீண்டும் ஒரு புதிய நகர்வுப் பாதையைத்திறந்து - கனகராயன் குளத்தைச் சுற்றிவந்து - மாங்குளம் நோக்கி நகரமுயன்ற கொமாண்டோ படையினர், ஒரு பகல் சண்டையில் சின்னாபின்னமாகினர்.

ஜயசிக்குறுயின் கடிவாளம் சிங்களப் படையின் கைகளில் இடைக்கவேயில்லை. எனினும், நடவடிக்கை தொடரும் என்றும் சுதந்திரதினப் பொன்விழாவுக்கு முன்னர் பாதை அமைப்பு பூர்த்தியாகிவிடும் என்றும் – ரத்வத்த - நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இறுமாப்பும் – அதீதநம்பிக்கையும் – புலிகள் பற்றிய தவறான புரிதலும்தான் ஜயசிக்குறுய் போர்த்திட்டத்தின் ஆணிவேர் இந்த தவறுகளை கொழும்பு பத்திரிகைகள் சுட்டிக்காட்டவும் முனைகின்றன. ஆயினும் தொடங்கியதை எப்படி முடிப்பது என்பதே, இராணுவத்தலைமையின் தற்போதைய பிரச்சனை.

என. அதேவேளை, கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள ஆயுத தளபாடங்களும் - வாகனங்களும் மற்றும் இராணுவ சாதனங்களும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவத்தின் ஒவ்வொரு நகர்வு முயற்சிக்கும், படைத்தலைமை பெரிய விலை கொடுக்கவேண்டியுள்ளது. புலிகள் இயக்கத்தின் மரபுப் போர்ப்பலம் இராணுவத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக எழுந்துள்ளது. தாக்குதல் முனைகளில் படையினர் அதிக அக்கறை காட்டும்போது - அவர்களின் தற்காப்பு அரண்களைத் தாக்கி, படையினர்க்கு பலத்தசேதத்தை புலிகள் உண்டுபண்ணுகின்றனர். இதனால், கைப்பற்றப்படும் பகுதிகளையும் பாதுகாத்தபடி முன்னேற முயல்வது படையினருக்கு பாரிய பிரச்சனையாக உள்ளது.

இந்தச் சவால்களைச் சமாளிக்க பாதையின் இருமருங்கும் 10 கி. மீற்றர் அகல நிலத்தல் நிலைகொண்டபடி, கைப்பற்றப்பட்ட இடங்களுடன் சேர்த்து, பாதையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு ரத்வத்த பதிலளித்திருந்தார். இது படையினரின் பாதுகாப்புப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் அருமருந்தாக அமைந்துவிடாது.

ஜயசிக்குறுய் படையினரைப் பொறுத்தவலையில் ஒருவகைப் பிரச்சனையைத் தீர்க்க, அது இன்னொரு வகைச் சிக்கலை அவர்களுக்கு உண்டு



பண்ணுகின்றது. இராணுவ தலைமைப் பீடமும் - சிங்களத்துப் பத்திரிகைகளும் ஜயசிக்குறுயின் முடிவு பற்றி சிங்கள மக்களுக்கும் - இராணுவத்திற்கும் நம்பிக்கையூட்டுகின்றன.

த. வி. போராட்ட வரலாற்றில், ஜயசிக்குறுய் சமர், ஒரு பிரத்தியேகஇடத்தைப் பிடித்து விட்டது. சமர் முடிவுறாத இன்றைய நிலையிலும்கூட ஜயசிக்குறுய் ஒருபாரிய சமராகவே விளங்குகின்றது. சமர் நீளும் காலம் - சமரின் இராணுவ பரிமாணம் என்பவற்றை கருத்தில் எடுத்தால், உலகின் பிரபலமான சமர்களுடன் ஒப்புநோக்கக் கூடிய அளவுக்கு சர்வதேச முக்கியத்துவம் இதற்கு வழங்கப்படும்.

8 மாதகாலமாக இடைவிடாது– தீவிரமான முறையில் - ஜயசிக்குறுய் சமர் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இது நவீன இராணுவ வரலாற்றில் அரிதான ஒரு சம்பவம்.

இரண்டாம் உலகப் போரில், சோவியத்யூனியனைக் கைப்பற்ற ஜேர்மனியப் படைகள் நடாத்திய ஒரு சமர் பிரபல்யமானது,

'ஒப்பறேசன் பார்பறோசா' என்பது அதன்பெயர். இது இரண்டு வருடங்கள் இடைவிடாது - தீவிரமான முறையில் தொடர்ந்து நடந்து - இறுதியில் தோற்றது. இந்த சமர்த்தோல்வியுடன்தான் ஜேர்மனியின் வீழ்ச்சி ஆரம்பமாகி - இறுதியில் போரில் தோற்றது. இரண்டாம் உலகப் போர் தொடர்ச்சியாக 6 வருடங்கள் நடந்தது. ஆனால், அந்தப் போருக்கு உட்பட்ட நிலையில் நடந்த சமர்கள், மாதக்கணக்காக நீள்வது என்பது வெகு அபூர்வம். இரண்டாம் உலகபபோர் கண்ட பாரிய சமர் 'ஒப்பறேசன் பார்பறோசா'.

ஒப்பறேசன் பார்பறோசாவுக்கும், ஒப்பறேசன் ஜயசிக்குறுயிக்கும் இடையே பலவேறு ஒற்றுமைகள் உண்டு. அவற்றின் முடிவுகளுக்கு இடையேயும் ஒற்றுமை காணப்படுமா! என்பது ஆர்வமான ஒரு விடயமாகும். O

இலக்கை அடைந்து நடவடிக்கையைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று ரத்வத்த துடிக்கின்றார். இலக்கை அடையாது திரும்பிச் செல்வது சிங்களப்படைக்கு நல்லது என்று களமுனைத் தளபதிகள் ஆலோசனை கூறுகின்றனர் ஆனால், முன்னேக் கிப்பாய்தல் - யாழ்தேவி போன்று திரும்பிச்செல்ல முடியாத ஒரு இராணுவ நடவடிக்கையாக ஜயசிக்குறுய் மாறிக்கொண்டிருக்கிறது. ஜயசிக்குறுயின் இலக்கு என்பது பேரினவாதத்தின் இலக்கு என்றாகிவிட்டது. இந்த இலக்கை அடைவதா! இல்லையா என்பதில்தான் சந்திரிகா அரசாங்கத்தின் தலைவிதியே தங்கியிருக்கின்றது. ஜயசிக்குறுயின் வெற்றி சிங்களத்தின் வெற்றியாகவும்-அதன் தோல்வி சிங்களத்தின் தோல்வியாகவும் பார்க்கப்படக்கூடிய அளவுக்கு, அங்கே நிலைமை உள்ளது. எனவே, ஜயசிக்குறுயின் நிலை ஆப்பிழுத்த குரங்கின் கதையாகவே உள்ளது.

இந்த 8 மாதச் சமரில் சிங்களப்படை சந்தித்த இழப்பு பிரமாண்டமானது. 3000 ஆட்களைப் பலிகொடுத்தும், நடவடிக்கை இடைநடுவில் நிற்கின்றது. 17ராங்க்குகள், 4 ஆட்டிலறிகள், 2 உலங்குவானூர்திகள் உட்பட பெருந்தொகையான வெடிபொருட்கள் புலிகளின் தாக்குதலில அழிந்துள்

# வெறியாட்டு ஊழியம்

சிறை அதிகாரியின்
ஊதுகுழலொலி எழுந்த மறுகணம்
சிறைக்கதவுகள் தாமே திறந்துகொண்டன.
களஞ்சிய அறைக் கதவும்தான்.

கத்திகள் கோடாரிகள் ஏந்திய
சிங்களத் திங்கியல் கைதிகள்
அரச காவலரென
சிறை முற்றத்தில் பரவினர்.
உருவேறிய மூளை உந்தித்தள்ள
சந்நதம் கொண்டு தெறித்தனர்.

ஒருபோதும் தாமே திறந்துகொள்ளாத
தமிழர்களின் சிறைக்கதவுகளை
கோடாரிகள் தறித்தன.

குற்றமிழைக்காத குற்றத்திற்காக
சிறையுள் திணிக்கப்பட்ட
தமிழர்களின் மண்டைகளை
கத்திகள் பிளந்தன.

சிறை அதிகாரியின்
செவிப்பறையில் மோதி அதிர்ந்தது
மரணக் கூச்சல்.
உசுப்பிவிட்ட ஊதுகுழல்
மௌனத்தில் உறைந்தது.

நுரைத்துப் பெருகிய குருதி
பலியெடுத்த பாதங்கள் சிலிர்க்கத் தழுவி
சிறை விறாந்தைகளில் வழிந்தது.
குருதித் தீண்டலில்
சிறைச்சுவர்கள் போதையுற்றுக் கிறங்கின.

வெளியே மட்டுமல்ல
சிறையின் உள்ளேயும்
தமிழர்களின் குருதி அளையக்கிடைத்த
தங்களின் கொடுப்பினையை
வியந்து சிலாகித்தனர் கைதிகள்.
அவர்களின் தண்டனைக் காலம்
காலத்தை முந்திக் கரைந்தது.

கைதிகள் புரிந்த வெறியாட்டு ஊழியம்
அவர்களின் பாவங்களைக் கழுவிற்றென்று
வெளியே -
கைதிகளின் சகாக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

''புண்ணியம் சம்பாதிக்க
தமிழர்களைக் கொல்லுங்கள்''
சிங்களச் சாத்தான்களுக்கு
மகாவம்சம் வேதம் ஓதுகிறது.
தீவெங்கிலுமுள்ள புத்தரின் சிலைமுகங்களில்
ஞானம் அழிந்து
பீதி வழிகிறது. O

எஸ். உமாஜிப்ரான்

# துளியும் வெட்கமில்லை என்றானால்...

# துணியெதற்கு? துண்டெதற்கு?

நல்லகாலம் பிறந்தாச்சாம்.
குடுகுடுப்பைக்காரர்கள் குறிசொல்லத் தொடங்கிவிட்டனர்.
இனியென்னவேண்டும் உனக்கு?
புகுந்து விளையாடு.
தமிழனே!
நீதேடிய ஒளிவட்டமும்,
அவாவிய நிமிர்ந்தவாழ்வும்
உனக்கினிக் கிட்டும்?
வாய்க்கால் வெட்டும் மாநகர ஆட்சிக்கும்,
நாய்பிடிக்கும் நகரசபைக்கும்,
சின்ன மதகுதிருத்தும் பிரதேசசபைக்கும்தானே
இத்தனை விலைகொடுத்துப் போராடினாய்?
நேற்றுவரை நெஞ்சு நிமிர்த்தியிருந்த
ஆற்றலின் வடிவே!
யாழ்ப்பாணக் குடாநாடே!
கண்ணாடிக்குடுவையில் கருத்தரித்த ''தலைவர்கள்''
உன்னைக் கைபிடித்துப் பார்க்க வருகின்றனர்.
என்தாய்மடியே!



உன் அடிமன ஆழத்தை யார்தான் அளவெடுக்கமுடியும்?
நெஞ்சுக்குள்ளெரியும் நெருப்பைக் கணக்கெடாது,
மௌனத்தைச் சம்மதமென்று எண்ணியபடி,
பேர்தெரியாத புதுமுகங்களெல்லாம்
ஊர் வருகின்றனர்.
கேட்டுப்பார்.
உன்தலைவர்களென்று சத்தியப்பிரமாணம் செய்வர்.
உலகுக்கே தலைமைதாங்கும் தகுதியுள்ள உனக்கு
இவர்களெல்லாம் தலைவர்களென்றால்...
அழுவதா? சிரிப்பதா?
நேற்றுவரை கொழும்பிலிருந்து
கப்பலில் உனக்குப் பெற்றோல் வந்தது.
சக்குப்பிடித்த குத்தரிசியும்,
சாராயமும் வந்தது.
இன்று விமானத்தில் ''தலைவர்கள்'' இறக்குமதியாகின்றனர்.
உள்ளே புகைந்தபடி கிடக்கும் எரிமலையை
எவர்தான் கணக்கிலெடுத்தார்?
வந்திறங்கும் இவர்களின் வரலாறு தெரியுமா?
சந்தர்ப்பவாதச் சகதியில் புரண்டெழும்
எந்தச் சுரணையுமற்ற எருமைகள்.
கண்ணீரே வாழ்வென உனக்கெழுதிய கைகளுக்கு
வளையல் பூட்டி வடிவுபார்த்தவர்கள்,
வற்றாவுன் கிணற்றின் அடிநீருறிஞ்சிய
தீயின் நாவுகளுக்குத் தீனி போட்டவர்கள்.
அவலமுற்று நீ ஊரெங்கும் ஓடிய போது
கவலையற்றிருந்த ''கொழும்பு உல்லாசிகள்.''
வேதமோதும் சாத்தான்மரத்தின் வேர்கள்.
விலைபோன பழைய சேனாதிபதிகளின்

## உலைக்களம்

— வியாசன்

புதிய வாரிசுகள்.
நவாலியிலும்;
நாகர் கோவிலிலும்;
யாகப்பர் கோவில் நடுக்கூரை மீதும்
குண்டெறிந்தவனுடன் கூடிக்களித்திருந்தோர்
இன்று
காணாமற்போனவர்களுக்காகக் கண்ணீர் வடிக்கின்றனர்.
உழுது விதைத்தவன் ஊரில்லாத போது
கதிரறுக்க வந்துள்ளனர் முகமூடித்திருடர்கள்.
ரோஷநரம்பை ஏலத்தில் விற்றுவிட்டு
வேஷங்கள் வீதியுலா வருகின்றன.
எட்டுவருடங்கள் எங்கெங்கோ தீனிபொறுக்கிவிட்டு
முற்றத்திலிறங்குகின்றன கண்கொத்திப் பறவைகள்.
விண்தொட நிமிர்ந்த உன்வாழ்வு கருக்கிய
பேய்களின் கண்களுக்கு மையெழுதிய பிடாரிகள்
வாசல் வருகின்றனர்.
கையில் விளக்குமாறுடன் காத்திரு.
விளாசு.
செம்மணியிலுந்தன் சிறுபூ சிதைந்தபோது
அந்தக் கண்மணி கதறிய காலக்குரலுக்கு
மௌனத்திரையிட்டு மறைத்தவர்கள்
எந்த முகத்தோடு வந்துள்ளனர்.
மானத்துக்கணியும் வேட்டியை மடித்து வைத்துவிட்டு
ஆடென்றாள் — அவள்
இவர்கள் அம்மணமாக ஆடுகின்றனர்.
கூரையேறிக் கோழிபிடிக்கத் தெரியாதவன்
வானமேறி வைகுந்தம் போவானாம்.
துளியும் வெட்கமில்லை என்றானால் —
துண்டெதற்கு ? துணியெதற்கு ?
கண்ணீரில் உன் கன்னங்கள் கரைந்து
உயிர்கருக நீ ஓலமிட்ட போது — ;
'' வெற்றிவேலரின் மருமகளுக்கு '' விழிதிறக்கவில்லை.
வெள்ளவத்தையில் வீதியுலாவும்,
கொள்ளுப்பிட்டியில் கோலாகலமாகவுமிருந்த
சீமாட்டிக்கு இன்று சிம்மாசனம் தேவையாம்.
பழைய உறவுகளுக்கு பாலமமைக்க வந்துள்ளார்.
விடுதலைக்கு உயிர்விலை கொடுத்து
நீ அவலத்தின் மடியில் அந்தரித்துக்கிடந்தபோது,
சுதந்திரத்துக்கான
காணிக்கையென நீ கண்ணீர்ப் பூக்களைச் சொரிந்தபோது,
மாணிக்க தாசனென்ற '' மக்கள் திலகத்துக்கு ''
உனக்காகப் பேச ஒரு வார்த்தையும் கிட்டவில்லை.
தாண்டிக்குளத்தில் தலையாட்டிக் கொண்டும்,
வவுனியாவில் வரிவாங்கிக் கொண்டும்,
பிள்ளை கடத்திப் பேரம் பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு
நகரபிதாவாகும் நப்பாசை வந்துள்ளது.
இன்னும் இன்னும் எவரெவரோ -
பேர்! ஊர்தெரியாத ''பிரபலங்களெல்லோரும்''
பாருந்தன் வீதியிலே — பறக்கின்றார்.
ஊரையடித்து உலைமூட்டி வாழ்ந்தவர்கள்,
சங்கக்கடையுடைத்துச் சாப்பிட்ட சாதுரியர்,
தர்மகர்த்தா சபையின் தலைவர்,
செயலாளர்,
சைக்கிள் களவெடுத்த சமாதான நீதவான்கள்
எல்லோரும் உனக்கு இனித்தலைவரென்றானால்
உள்ளே உனக்கெரியும் உரிமைத்தீ என்னாகும்?
ஆவிகலங்கி அந்தரிப்புக்குள்ளான
தாயே! கலங்காதே.
சூரியனைச் சுற்றிய தூசிப்படலம்
விரைவில் எரிந்து பொசுங்கும்.
கொடியேறியுள்ளது.
ஊர்முழுதும் வீதியிற் திரண்டுள்ளது.
திருவிழா முடிந்ததும் வீதிவெளிக்கும்
பிறகும் நாங்களும், நீயும்தான்.
எம்மைப்பிரிக்க எவரால் முடியும்?
உன் உயிர்மூச்சையே சுவாசித்தபடி உள்ளோம்.
வருவோமெனச் சொல்லுக.
வருவோம்.

o

# விடுதலையின் சின்னமா!

# பயங்கரவாதத்தின் குறியீடா!

இரண்டாம் உலகப் போரின் முடிவைத் தொடர்ந்து உலகெங்கும் காலனித்துவ எதிர்ப்பு மற்றும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் முனைப்புப்பெற்றன. உரிமைகளை அடித்தளமாகக்கொண்ட இந்த விடுதலைப் போராட்டங்களுக்கு சோவியத்யூனியன் தலைமையிலான சோசலிசமுகாம் தாராளமாக உதவியது.

சோவியத் தயாரிப்பான AK 47 விடுதலைப்போராளிகளின் உற்ற நண்பனாகவும் – புரட்சியைப் பிரசவிக்கும் மருத்துவிச்சியாகவும் கருதப்பட்டது AK துப்பாக்கியை பெருமை பொங்க அணைத்தபடி பத்திரிகையாளர்களது கமராக்களின்முன் விடுதலை வீரர்கள் தோன்றினர். இராணுவ சீருடைகளுடன் துப்பாக்கிகளைப் பார்த்துப் பழகிய மக்களுக்கு, விதவிதமான பண்பாட்டு உடைகளுடன் – எளிமையாகக் காட்சியளித்த விடுதலைப் போராளிகள் – AK 47 துப்பாக்கிகளுடன் நின்ற நிழல் படங்கள் மக்களது கவனத்தை பெரிதும் ஈர்த்தன. எல்லாவற்றுக்கும் மேலாக குர்திஸ் மக்களின் விடுதலை இயக்கமொன்று தனது கொடிச்சின்னமாக AK 47 துப்பாக்கியைப் பொறித்து மகிழ்ந்தது.

இவ்விதம் விடுதலையின் சின்னமாக – புரட்சியின் கருவியாக AK 47 ஐ கருதும் ஒரு புதிய அரசியற்படிமம், விடுதலையை விரும்பும் மக்களிடம் உருவானது.

இதேவேளை, புரட்சி அரசியலுக்கு - விடுதலைப் போராட்டங்களுக்கு எதிரான ஏகாதிபத்திய சக்திகள் AK 47 ஐ கொலைவெறியின் சின்னமாகப் பிரச்சாரப்படுத்தியது. பயங்கரவாதிகளின் ஆயுதம் தான் AK 47 என்ற ஒரு அரசியற் படிமத்தை மேற்கு நாட்டு மக்களின் மனங்களில் உருவாக்கி விடுவதில் அவை வெற்றியும் கண்டன.

இவ்விதம், ஒரு பகுதியினரால் விடுதலைக்கருவியாகவும் - வேறு ஒரு பகுதியினரால் பயங்கரவாத ஆயுதமாகவும் உருவகிக்கப்பட்ட AK 47 துப்பாக்கி, கடந்தமாதம் தனது 50 ஆவது வயதைக் கொண்டாடியுள்ளது.




AK 47 உடன் மிகேல் கலஸ்னிகோவ்

இந்தத் துப்பாக்கியை வடிவமைத்தவர் இன்றும் – 76 வயதில் – வாழ்ந்து கொண்டிருக்கிறார். மிகேல் கலஸ்னிகோவ் என்ற பெயருடைய இந்த முன்னாள் இராணுவ வீரர் – உயிருடன் உள்ள இன்றைய நாட்களிலேயே ரஸ்ய அரசாலும் - அதன் மக்களாலும் தாராளமாகக் கௌரவிக்கப்படுகின்றார் விண்வெளி வீரர் யூரி ககாரினைப் போல, இந்த இராணுவ வீரர் கலஸ்னிகோவும் – ரஸ்ய மக்களால் - கதாநாயகனாகப் போற்றப்படுகின்றார். இவரது உருவம் பதித்த முத்திரை ஒன்றை சோவியத் அரசு வெளியிட்டு அவரைக் கௌரவித்தது. இவரது சொந்த மாகாணத்து நகரம் ஒன்றில் இவரது உருவச் சிலை நிறுவப்பட்டு அதிஉயர் கௌரவம் கொடுக்கப்பட்டது. இவர் வடிவமைத்த துப்பாக்கி இவரது பெயரையும் தாங்கிநிற்கின்றது. தன்னியக்க கலஸ்னிகோவ் 47.

சாதாரண விவசாயி ஒருவரின் மகனான கலஸ்னிகோவ் 18 வயதில் ராங்க் சாரதியாக செம்படையில் சேர்ந்தார். இரண்டாம் உலகப் போரின்போது [1941] ஜேர்மனியர்கள் ஏவிய ராங்க் எதிர்ப்புக்குண்டொன்றால் இவரது ராங்க் அழிக்கப்பட்டது. கடுங்காயமடைந்த கலஸ்னிகோவ் – அந்த ஓய்வுக்காலத்திலேயே – இந்தத் துப்பாக்கியை வடிவமைத்தார். 'இந்தச் சாதனையை நிகழ்த்தியபோது அவருக்கு வயது இருபத்தெட்டு. வடிவமைக்கப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் (1949) சோவியத் இராணுவத்தின் பிரதான ஆயுதமாக AK 47 இடம்பிடித்துக்கொண்டது.

இன்று உலகின் 55 நாடுகள் தமது தரைப்படையின் பிரதான ஆயுதமாக AK 47 ஐ கொண்டுள்ளன. அத்துடன் உலகெங்குமுள்ள விடுதலை இயக்கங்களும் இந்தத் துப்பாக்கியை தமது போர்க்கருவியாக தேர்ந்தெடுத்து - பயன்படுத்திவருகின்றன.

1970 ஆம் ஆண்டின் ஒரு நாள் – தென்னாபிரிக்க அரச இராணுவம், புரட்சியாளர்களிடமிருந்து AK 47 ஒன்றை கைப்பற்றியது. அதன் இயங்குசக்தியை ஆராய அதைப் பரீட்சித்தது. பரிசோதனையின்போது – ஒரு நிமிடத்தில் – 600 ரவைகளை எந்தவித தடங்கல்களுமின்றி விசிறித்தள்ளியது. AK 47 ஐ சேற்று நீருக்குள் அமிழ்த்திவிட்டு – மீண்டும் எடுத்து இயக்கிய போதும் முன்னரைப்போன்றே எந்தவித தொல்லைகளும் கொடுக்காது நேர்த்தியாகச் சுட்டது என்று தென்னாபிரிக்க இராணுவ அதிகாரிகள் தகவல்கூறி - வியந்திருந்தனர். [ துப்பாக்கிகளின் நேர்த்தியான இயக்கத்திற்கு அவற்றை சுத்தமாகப் பேணுவது அவசியம் என்பதை எமது போராளிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றைய வகைத் துப்பாக்கிகளுடன் ஒப்பிடும்போது AK 47 க்கு இந்த சிறப்புத்தகுதி இருப்பது உண்மை].

எடுத்துச்செல்வதிலும் - சுலபமாகப் பேணுவதிலும் – எல்லாவகைக் காலநிலைகளுக்கு ஈடுகொடுப்பதிலும் AK 47 கெரில்லா வீரர்களுக்கு மிகவும் உதவியது. இதனால் கெரில்லா வீரர்கள் உற்சாகம் பெற்றனர். ஆனால், கெரில்லா எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட அரச இராணுவங்கள் வைத்திருந்த ஆயுதங்கள் மேற்கூறிய சாதகத் தன்மைகளைக் குறைவாகவே கொண்டிருந்தன. அரச இராணுவங்களின் இந்தச் சிக்கலைத் தீர்க்க அமெரிக்க இராணுவத்துறை முயன்றது. M - 16 என்ற வகைத் துப்பாக்கிகளை, AK 47 ஐ எதிர்கொள்ள அமெரிக்கா தயாரித்தது.

இந்த 50 வருடத்தில் 15 கோடி AK 47 கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. இதன் போட்டி ஆயுதமான M - 16 இன் தொகை ஒரு கோடி.

இதேவேளை, AK 47 ஐ அடியொற்றி பல்வேறு நாடுகளில், பல்வேறு பெயரில் AK வகைத் துப்பாக்கிகள் தயாரிக்கப்படுகின்றன. இதில் சீனா முதல் நிலை வகிக்கின்றது.

உலகச் சந்தையில் விற்பனைக்கு விட்டதைத் தொடர்ந்து. அடக்குமுறையை மேற்கொள்ளும் அரச இராணுவங்களும் AK துப்பாக்கிகளை பயன்படுத்துகின்றன இதனால் AK துப்பாக்கிக்கு இருந்துவந்த அரசியல் முத்திரை வலுவிழந்துவருகின்றது.

**இராணுவ சீருடைகளுடன் துப்பாக்கிகளைப் பார்த்துப் பழகிய மக்களுக்கு விதவிதமான பண்பாட்டு உடைகளுடன் - எளிமையாகக் காட்சியளித்த விடுதலைப் போராளிகள் - AK 47 துப்பாக்கிகளுடன் நின்ற நிழல் படங்கள் மக்களது கவனத்தை பெரிதும் ஈர்த்தன.**

**விடுதலையின் சின்னமாக AK47 ஐ கருதும் ஒரு புதிய அரசியற் படிமம் ஒருபுறமும் அதேவேளை பயங்கரவாதத்தின் குறியீடாக AK 47 ஐ காட்டும் இன்னொரு அரசியற் படிமம் மறுபுறமுமாக AK 47 இருவேறு அர்த்தங்களுடன் உலகமாந்தரால் பார்க்கப்படுகின்றது.** O

## இந்தியத் தேர்தல்: கூடும் கூட்டணிகள்

இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக இந்தியா தயாராகின்றது. தனிக்கட்சி ஒன்று ஆட்சியமைப்பது சாத்தியமில்லை என்ற யதார்த்தத்தைக் கருத்திற்கொண்டு தேர்தல்கூட்டணிகளை அமைப்பதில் – இந்தியாவின் தேசியக்கட்சிகள் கவனம் செலுத்தியுள்ளன. இதனால் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பிராந்தியக் கட்சிகளின் முக்கியத்துவம் இந்தத்தேர்தலில் இருக்கப்போகின்றது.

இம்முறை, நாடாளுமன்றத்திற்கான தேர்தல்களம் மும்முனைப்போட்டியை முழுமையாகச் சந்திக்கின்றது. பலமான பிராந்தியக்கட்சிகளின் துணையுடனும் – இடதுசாரிக்கட்சிகளின் உதவியுடனும் ஐக்கியமுன்னணி களத்தில் இறங்கியுள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக நாடாளுமன்றம் புகுந்த பாரதீய ஜனதாக்கட்சி, பிராந்தியங்களின் எதிர்க்கட்சிகளையும் மற்றும் ஒருசில ஆளும்பிராந்தியக் கட்சிகளையும் இணைத்து ஒரு பலமான கூட்டணியை அமைத்துள்ளது. இந்தக்கூட்டுடன் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்ற குழுக்கள் பலவும் இணைந்து பா. ஜ. கட்சிக் கூட்டணியை பலப்படுத்தியுள்ளன. இதேவேளை, தகுந்த துணைக் கட்சிகளின் ஆதரவின்றி காங்கிரஸ்கட்சி அநாதையாய் களம்புகுகின்றது. அத்துடன் கட்சிப் பிளவுகளால் அது கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ்கட்சியின் சிறுபிள்ளைத்தனமான செயலாலேயே தேர்தல் நடாத்தப்படவேண்டிய சூழல் உருவானது என்று இந்தியப்பத்திரிகைகள் விசனம் செலுத்தியுள்ளன. அத்துடன், தேசிய அளவில் தேர்தலைச் சந்திக்கக்கூடிய ஆளுமையும் – பிரபலமும் கொண்ட தலைமை காங்கிரசிற்கு இல்லை என்றும் பொதுவாக கருதப்படுகின்றது. கட்சிப்பிளவு, செல்வாக்குச்சரிவு, தகுந்த தலைமையின்மை, சரியான கூட்டணி அமையாமை போன்ற பலவீனங்கள் காரணமாக-கடந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் வென்ற தொகுதிகளின் எண்ணிக்கையைக்கூட- இம்முறை பெறமுடியாது போகும் அவலம் காங்கிரசிற்கு ஏற்படப்போகின்றது என்று தேர்தல் அவதானிகள் ஆரூடம் கூறியுள்ளனர்.

இதேவேளை, பா. ஜ.கட்சியின் சக்தி முன்னைய தேர்தலை விட சற்று அதிகரித்துள்ளது என்றும் நம்பப்படுகிறது. அத்துடன் இந்திய மக்களின் மரியாதைக்குரிய ஒருவரான திரு.வாஜ்பேயி அவர்களை பிரதமர் பதவிக்கான நபராக எடுத்துக்கூறி, பா. ஜ. கட்சி வாக்குக் கேட்கின்றது. மற்றைய இரண்டு கூட்டணிகளும் தமது பிரதமர் பதவிக்கான நபர் யார் என்பதை உறுதியாகக் கூறவில்லை. இந்த நிலை பா ஜ. கட்சிக்கு ஒரு வாய்ப்பு என்று இந்திய அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர். அத்துடன், மதவாத - சாதிவாத குணத்தை, பா. ஜ. கட்சி மாற்றிவருவதாகவும் இதனால் வெற்றி வாய்ப்புக்கான சூழல் அதிகரித்துள்ளது என்றும் இந்திய அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஈழத்தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்தை ஆதரிக்கும் இந்தியக்கட்சிகளில் பெரும்பாலானவை, பா. ஜ. கட்சியுடன் தேர்தல் கூட்டுச் செய்துள்ளன. இதனால் தமிழீழமக்களின் சிறப்புக்கவனத்தை இந்தத்தேர்தல ஈர்த்துள்ளது. ஈழத்தமிழரின் நீண்டகால நண்பரான திரு. ஜோர்ஜ் பெர்னாண்டசின் தலைமையின்கீழ் உள்ள சமதாக் கட்சியும் பா. ஜ. கட்சியின் கூட்டணியில் உள்ளது. இந்த அம்சம் சிங்கள அரசினதும் சிங்கள மக்களினதும் சிறப்புக் கவனத்தையும் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இதேவேளை, ஐ. முன்னணியின் பலமும் உயர்ந்தே உள்ளது இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், வெற்றி வாய்ப்பைத் தீர்மானிக்கும் வாக்காளர்களாக முஸ்லிம்கள், தலித்துகள் மற்றும் சிறுபான்மை இனங்கள் என்பவை உள்ளன. இம்முறை, தேர்தலில் இந்த தீர்மானகரசக்திகள், பெரும்பாலும் ஐ. முன்னணியின் பக்கமே உள்ளன. இந்த வாக்குகள் பிளவுபடாவிட்டால் அது ஐ. முன்னணிக்குச் சாதகமான அம்சமாகவே இருக்கும். அத்துடன், ஒன்றரை வருட ஐ. முன்னணி ஆட்சி இந்திய அரசியல் வரலாற்றைப் பொறுத்தளவில் ஒப்பீட்டுரீதியாக - ஊழலற்ற, நேர்மையான, பொருளாதார உயர்ச்சிக்கு வழிசமைத்த ஆட்சியாகவே இந்தியமக்களால் கருதப்படுகின்றது.

இதேவேளை, நாடாளுமன்றின் அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறும் வாய்ப்பை எந்தக்கூட்டணியும் பெறாமல் போகலாம் என்ற கருத்தும் பலமாகவே உள்ளது. அப்படி ஒரு நிலை வந்தால், மீண்டும் காங்கிரசின் ஆதரவுடன் ஐ. முன்னணி, அரசாங்கம் அமைக்கும் நிலை ஏற்படலாம் என்றும் அவதானிகள் ஊகிக்கின்றனர். உபகண்டத்தில் நடக்கவிருக்கும் வாக்குச்சமரில் எந்தக் கோட்டை வெற்றிபெறப் போகின்றது? O

# புலிகளின் அரசியல் நிலைப்பாடு

சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுப் பொதி தமிழரின் தேசிய அபிலாசைகளைத் தொட்டுநிற்கவில்லை என்றுகூறி- அதன் தீர்வுத் திட்டத்தை தலைவர் பிரபாகரன், தனது மாவீரர்நாள் செய்தியில் நிராகரித்திருந்தார்.

அதேவேளை, தமிழரின் இனப்பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வுத்திட்டம் என்பது தமிழர்தேசியம் - தமிழர்தாயகம் - தமிழர்தன்னாட்சி என்ற அரசியல் அடிப்படைகளை அங்கீகரித்து – ஏற்றுக்கொண்ட ஒரு உருப்படியான தீர்வு யோசனையாக அமையவேண்டும் என்றும் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழரின் இனப்பிரச்சனை ஒரு தேசியப் பிரச்சனை. இதனை சந்திரிகா அரசு புரிந்துகொள்ளவேண்டும். சிங்கள அரசு கூறவிரும்புவது போல இது ஒரு சிறுபான்மையினரின் பிரச்சனை அல்ல. தமிழீழ மக்கள் ஒரு தேசிய இனம். ஒரு தேசிய இனத்திற்குரித்தான அனைத்துத் தகுதிகளையும் ஈழத்தமிழினம் கொண்டுள்ளது. சிங்களதேசத்தால் ஒடுக்கப்பட்டு – ஆளப்படுவதை விரும்பாத நிலையிலேயே தமிழரின் உரிமைப்போராட்டம் ஆரம்பமானது. தனியரசொன்றை அமைக்கமுயலும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமிழர்தேசியம் தான் அடிப்படை.

இந்தத் தேசியஉணர்வு காரணமாகவே – தமிழ்மக்கள் - விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி, போர்ப்பளுவையும் நீண்டகாலமாகத்தாங்கி போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கவும் உதவுகின்றனர். உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழர்கள் தனியரசிற்கான எமது போராட்டத்தை ஆதரித்து – உதவுவதற்கும் இந்தத் தேசியப்பிரக்ஞையே பிரதான காரணம்.

ஆகவே, இந்தப் போராட்ட உணர்வுக்கு - தேசியப் பிரக்ஞைக்கு ஆதார சக்தியாகவுள்ள தமிழர் தேசியத்தை சிங்கள அரசு அங்கீகரிக்கவேண்டும்.

இதேவேளை,

இனப்பிரச்சனைத் தீர்வுக்காக முன்வைக்கப்படும் எந்த ஒரு அரசியல் தீர்வுத்திட்டமும் தமிழர் தாயகக்கோட்பாட்டை அங்கீகரித்து-ஏற்றுக்கொள்வது அவசியமாகின்றது. வட - கிழக்கு இணைந்த நிலப்பரப்பும் - அதற்குச் சொந்தமான நீர்ப்பரப்புமே தமிழரின் தாயக பூமியாகும். வரலாற்றுக்காலம் தொடக்கம் தமிழர்கள் தம் தாயக பூமியில் வேர்கொண்டு வாழ்கின்றனர். தமிழ் மக்களின் வாழ்க்கையும்- வரலாறும் இந்த மண்ணுடன் இரண்டறக் கலந்துள்ளது. தமிழ் மக்களின் பாதுகாப்பான வாழ்க்கைக்கும்–கௌரவமான எதிர்காலத்திற்கும் தாயகநிலம் ஆதாரமானது. அதாவது, தமிழர் தாயக நிலம் என்பது தமிழ்மக்களின் அரசியல் வாழ்விலிருந்து பிரிக்கப்படமுடியாதது. ஆகவே, தமிழரின் தாயகக் கோட்பாட்டை சந்திரிகா அரசாங்கம், அங்கீகரித்து - ஏற்றுக்கொள்ள வேண்டும். முன்னைய சிங்கள அரசாங்கங்கள் தமிழர் தரப்புடன் செய்திருந்த பல உடன்பாடுகளில் தமிழரின் தாயகம் ஓரளவிற்கேனும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐரோப்பியர் இலங்கைத்தீவை கைப்பற்றும் வரை தமிழர் தாயகத்தில் – மிக நீண்டகாலமாக – தமிழரின் ஆட்சி நடைபெற்று வந்துள்ளது. இராச்சியம் என்றும் வன்னிமைகள் என்ற பெயரில் பல சிற்றரசுகளும் தமிழர் நிலத்தை தமது ஆளுகைக்குள் வைத்திருந்தன. ஆனால், இலங்கைத்தீவைவிட்டு பிரித்தானியா வெளியேறியபோது சிங்களவர் கைகளில் ஆட்சியதிகாரத்தைக் கொடுத்திருந்தனர். அன்றிலிருந்து கடந்த 50 வருடகாலமாக தமிழர் நிலத்தின் ஆட்சியதிகாரத்தை சிங்கள இனம் தனது கைகளில் வைத்திருந்து – தமிழர்களை இன ரீதியாக அடக்கியாளகின்றது. அதன் உச்சகட்டமாக சிங்களத்தின் படைகள் தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து வருகின்றன. இன அழிப்புச்செயற்பாட்டிலிருந்து தன்னை தற்காத்து – தமிழரின் தேசிய அடையாளங்களைப் பாதுகாக்கவே புலிகள் இயக்கம் ஆயுதப்போராட்டத்தை நாடியது. எனவே, தமிழ் மக்கள் தங்கள் தாயகபூமியில் பாதுகாப்பாகவும்- கௌரவமாகவும் - சுதந்திரமாகவும் வாழ்வதற்கு தமிழர் நிலத்தின ஆட்சியதிகாரம் தமிழ் மக்களின் கைகளிலேயே இருக்க வேண்டும். ஒரு தேசிய இனம் என்ற வகையில இந்த தன்னாட்சி உரிமைக்கு தமிழ் மக்கள் உரித்துடையவர்கள். அதே வேளை, இந்த தன்னாட்சி உரிமைக்கான மக்கள் அங்கீகாரத்தை, 1977 பொதுத்தேர்தலின் போது ஈழத்தமிழர்கள் வழங்கியிருந்தனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. ஆகவே, தமிழரின் தன்னாட்சி உரிமையை சந்திரிகா அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்.

இவ்விதம், தமிழர் தேசியம் – தமிழர் தாயகம் – தமிழரின் தன்னாட்சி என்ற அரசியல் அடிப்படைகளை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டத்தை சந்திரிகா அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்பதே புலிகளின் விருப்பமாகும்.

ஆனால், இவற்றை அங்கீகரிக்கமறுப்பதுடன் – அவற்றை திட்டமிட்டவகையில் அழித்துச்சிதைப்பதிலுமேயே சிங்கள அரசாங்கங்கள் அக்கறை காட்டுகின்றன.

தமிழீழம் – சிறிலங்கா என்ற இரண்டு தேசங்களைக்கொண்ட ஒரு தீவுதான் இலங்கை என்பது தமிழர்தரப்பு நியாயம்.

சிங்களவர்க்கே இலங்கைத்தீவு சொந்தம் என்பது பேரினவாதிகளின் வெளிப்படையான நிலைப்பாடு.

சந்திரிகா அம்மையாரோ இலங்கை ஒரு பல்லினநாடு என்று சாதுரியமாகப் பேரினவாதம் பேசுகின்றார். இந்தக்கூற்று கற்பனையானது. அத்துடன் உள்நோக்கம் கொண்டது.

பௌத்தத்தை அரசமதமாகவும் – சிங்களமொழியை ஆட்சிமொழியாகவும் – நாடாளுமன்றத்தை சிங்களவரின் ஏகபோக அதிகாரபீடமாகவும் ஏற்றுக்கொண்டுள்ள அரசியல் அமைப்பை சிறிலங்கா கொண்டுள்ளது. அதேவேளை, தமிழினத்தை இனரீதியாக ஒழிப்பதை இலட்சியமாகக்கொண்ட ஆட்சிபீடமே சிறிலங்கா அரசாகும். இவ்விதம் சிங்கள – பௌத்த இனவெறிச் சித்தாந்தத்தை அரசியல் அமைப்பாகக்கொண்டு ஆளப்படும் ஒரு நாட்டை பல்லினநாடு என்று அழைக்கும் கேலிக்கூத்லதை அம்மையார் நடத்துகின்றார்.

இவ்விதம் - அம்மையார் அழைப்பதன் மூலம் இனங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சமத்துவ ஆட்சியாளராக – உலகத்திற்கு தன்னைக் காட்டிக்கொள்ள விரும்புகின்றார். அத்துடன், பல்லினவாத கோசப் போர்வையால் தமிழர்தேசியத்தைபோர்த்து மறைத்து – அழிக்கவும் முயற்சிக்கின்றார்.

போலியாகப் பெருமைபேசி தமிழரின் தேசிய தனித்துவத்தை சாதுரியமாக மறுதலிக்க முயற்சிக்கின்றார்.

இதேபோன்று, தமிழ்மக்களின் தாயக கோட்பாட்டையும் தன்னாட்சி உரிமையையும் செல்லாக் காசாக்க –தனது தீர்வுப் பொதிமூலம்–அம்மையார் முயலகின்றார்.



தமிழர்தேசியம் தளைக்க உயிர்கொடுத்தோருக்கு சுடர் ஏற்றி தலைவர் மரியாதை செய்கின்றார்.

ஏற்கெனவே, சிங்களக்குடியேற்றங்களால் கணிசமான தமிழர்நிலம் அபகரிக்கப்பட்டு - தாயகநிலத்தொடர்பும் ஆபத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. இப்போது, அதிகாரப் பரவலாக்கலுக்கான நிர்வாக அலகுகள் என்றபோர்வையில் தமிழர்நிலத்தை கூறுகளாக்கித் துண்டுபோட்டு தமிழரின் தாயகக் கோட்பாட்டை நிரந்தரமாக அழிக்க சந்திரிகா அரசாங்கம் முயல்கின்றது.

இதேபோன்று, தமிழர் நிலத்தின் நிர்வாக அதிகாரம் ஒரு குடையின் கீழ் வந்து, தமிழ் மக்களுக்கென்று ஓர் பிரத்தியேகமான ஆட்சிமையம் உருவாவதை அனுமதிக்கக்கூடாது என்பதிலும் அம்மையார் அவதானமாக இருக்கின்றார். அவரின் தீர்வுப் பொதி இதை துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றது.

தமிழர் இனப்பிரச்சனையைக் குணப்படுத்த சந்திரிகா அரசாங்கம் வைத்திருக்கும மருந்து இராணுவத்தீர்வுதான்.

போர் மூலம் தமிழர் நிலத்தின் ஒரு பகுதியை சிங்களப்படை ஆக்கிரமிக்கலாம். அது தற்காலிக ஆக்கிரமிப்பாகவே இருக்கும். இந்த நில ஆக்கிரமிப்பு தமிழரின் தேசிய அபிலாசைகளை வீரியமிழக்கச் செய்யமாட்டாது என்பதை சந்திரிகா அம்மையார் உணர்ந்து கொள்ள வேண்டும். அதை உணர்ந்தபடி - தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றி- இரத்தக்களரிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, இலங்கைத்தீவில் நிரந்தர சமாதானம் நிலவச்செய்ய சந்திரிகா அரசாங்கம் முயற்சிக்குமா ?

சந்திரிகா அரசாங்கத்தின் இராணுவ அரசியல் அணுகுமுறைகளை ஆழமாக அலசிப்பார்க்கும் போது தமிழ்மக்களிடம் சமாதானத்திற்கான நம்பிக்கை வேர் அறுந்துவிழும் நிலையிலேயே உள்ளது.

O

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்